பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 22 சனிக்கிழமை (07-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:284

## 19 ஆவது அரசமைப்புத் திருத்த விவகாரம்:

# ஜனாதிபதி - பிரதமர் சமரசமுயற்சி 'அவுட்'!

## தனித்தனி வழிபோக இருவரும் முடிவு

கொழும்பு,செப்ரெம்பர்7

**19ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்த்துச் சமரசம் உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இருவரும் தனித்தனி வழிசெல்ல முடிவு செய்துவிட்டார்கள்.**

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டுவதற்கு வழிசெய்வதே 19 ஆவது அரசமைப்புத் திருத்தம்.

இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுவதை ஜனாதிபதி விரும்பவில்லை. ஆனால், பிரதமர் அதில் விடாப்பிடியாக உள்ளார்.

இந்த விவகாரம் குறித்து கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி மாளிகையில் இரண்டு மணிநேரம் இருவரும் சந்தித்துப் பேசினர்.

அந்தச் சந்திப்பை அடுத்து இந்தத் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி தெரிவிக்கும் யோசனைகளுக்கு இடமளிக்கலாமா என்பது குறித்து ஆராய ஆளும்கட்சி இணங்கியது. யோசனைகளைத் தெரிவிக்க ஜனாதிபதிக்கு மூன்று நாள்கள் கால

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு முன் புலிகள் இயக்கத் தடை நீக்கப்படுவது சரியானதல்ல என்று ஜனாதிபதி சந்திரிகா இதுவரை கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை என்று ஜனாதிபதியின் ஊடக இயக்குநரான ஜனதாச பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் வெற்றியின் அடிப்படையிலேயே புலிகள் இயக்கத்தடை நீக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு எனவும் அவர் கூறினார்.

புலிகள்இயக்கம் மீதான தடையை நீக்குமுன் அது குறித்து மிக அவ

(2ஆம் பக்கம் பார்க்க)

## 19 ஆவது திருத்தத்தை எதிர்க்க பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள் முடிவு

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பது என பொ.ஐ.முன்னணி நாடாளுமன்றக் குழு நேற்று முடிவுசெய்தது. குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது. 19ஆவது அரசமைப்புத் திருத்த விடயங்களை எம்பிக்களுக்கு லக்ஷ்மன் கதிர்காமர் விளக்கினார்.

பொ.ஐ.மு. மற்றும் ஸ்ரீ.ல.சு.கட்சி ஆகியவற்றின் நிறைவேற்றுக் குழுக்களுடன் இவ்விடயம் குறித்துப் பேசுவது எனவும், அதுவரை தற்போதைய சட்ட வரைபின் வடிவத்தில் அது அமைந்திருந்தால் அதை எதிர்ப்பது எனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பொ.ஐ.முன்னணி எம்.பிக்களான ரிச்சர்ட் பத்திரன, பௌஸி, றொனி டிமெல் ஆகியோர் இந்தக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை. (ஐ)

## யாழ்.அரச அதிபராக வைத்திலிங்கம்

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.மாவட்ட அரச அதிபராக து.வைத்திலிங்கம் நியமிக்கப்படுகின்றார்.

கடந்த மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைய அடுத்த ஓராண்டு காலத்துக்கு து.வைத்திலிங்கம் அரச அதிபராக நியமிக்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அரசஅதிபர் க.சண்முகநாதனை மாற்றும்படி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி பிரதமரை நேரில் சந்தித்து அழுத்தம் கொடுத்ததாகவும் -

அவருக்கு தாம் வழங்கிய உறுதிமொழிப்படி அந்த மாற்றத்தைச் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்ததாகவும் -

அதனடிப்படையில் க.சண்முகநாதனின் சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அவர் இளைப்பாற அனுமதிக்கப்படுவதாகவும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## தடைநீக்கத்துக்கு புலிகள் வரவேற்பு

கொழும்பு,செப்.7

விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் சமாதானப் பேச்சுகளில் நம்பிக்கையுடனும், உயிர்ப்புடனும் பங்களிப்பதற்கு பெரிதும் பயனளிப்பதாக இருக்கும் என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார்.

அமைதி, சமாதான முயற்சிகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது புலிகள் மீதான தடை. அது நீக்கப்பட்டிருப்பது சமாதான முயற்சிகளை முழுமையாக முன்நகர்த்தவும், சமாதான முன்னெடுப்புகளில் பயணிப்பதற்கும் ஒரு பாதையை ஏற்படுத்திக்கொடுக்க வழிவகுத்துள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டார்.

தடைநீக்கம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தடைநீக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியானது; வரவேற்கத்தக்கது.

மிகவும் கடினமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது, அரசைப் போன்று எமது அமைப்பும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் நடந்துகொள்வதே அனைவரதும் அபிலாஷை; எதிர்பார்ப்பு.

எனவே, தற்போது கிடைத்துள்ள உன்னதமான வாய்ப்பைப் பயன்படுத்தி நிரந்தரமான - கௌரவமான - சமாதானத்தை அடைவதற்கு திட சங்கற்பம் பூணவேண்டும்.

புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குவதன் மூலம் சமாதா

(2ஆம் பக்கம் பார்க்க)

### புலித் தடைநீக்கத்தை அடிப்படையாகக்கொண்டு

## அரசுக்கு எதிராக அணிதிரள ஜே.வி.பியினர் அறைகூவல்!

கொழும்பு,செப்.7

புலிகள் மீதான தடையை நீக்கிய விடயத்தின் அடிப்படையில் அரசைக் கவிழ்ப்பதற்கான பிரசாரத்தை ஆரம்பிக்கப்போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

புலிகள்மீதான தடை சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாக உள்ளது என்ற கருத்தை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளவில்லை என்று அந்தக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

புலிகளின் நோக்கம் அதனையும் அறியாது அந்த அமைப்பின் மீதான தடையை நீக்குவது தவறான செயல். புலிகள் தொடர்ந்தும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுவருகிறார்கள். தடைநீக்கம் அந்தச் செயல்களை அங்கீகரிப்பதாக மாறிவிடும்.

இந்தச் செயல்முறையைத் தோற்கடிக்க ஜே.வி.பி.தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரப் பசியால் உட்கட்சிப் பூசலைச் சந்தித்துள்ளது. ஆனால், அரசுக்கு எதிரான அனைத்துச் சக்திகளையும் அணிதிரட்டவேண்டிய தேவையிருக்கிறது - என்றார். (ஐ-4)

## ஆயுதம் பொருத்திய படகில் புலிகள் செல்ல அனுமதியா?

### ஜனாதிபதி சீற்றம்! விளக்கம் கேட்டு பிரதமருக்கு கடிதம்

கொழும்பு,செப்.7

ஆயுதங்கள் பொருத்தப்பட்ட படகுகளில் புலிகள் தமது உறுப்பினர்களை ஏற்றிச்சென்று வருவதற்கு அனுமதிப்பதா?

- இவ்வாறு குறிப்பிட்டு சீற்றத்துடன் விளக்கம் கோரும் வகையிலான கடிதம் ஒன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்துத் தொடர்பாக அரசுக்கு(ம்) புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடு குறித்து விளக்கமான அறிக்கை ஒன்றைப் பிரதமரிடம் கோரியிருக்கின்றார் ஜனாதிபதி.

புலிகளின் கடற்போக்குவரத்துத் தொடர்பாக கடற்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரதி ஒன்றையும் பிரதமரிடம் இக்கடிதம் மூலம் ஜனாதிபதி கோரியிருக்கின்றார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

### வீதிகளைத் திறப்பது பற்றி ஆராய்வதற்காக

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் இன்று பருத்தித்துறை விஜயம்

யாழ்ப்பாணம்,செப்.7

பிரதமரின் பணிப்பின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இன்று வடமராட்சிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பருத்தித்துறைப் பகுதியில் படையினரின் தேவைகளுக்காக மூடப்பட்டிருக்கும் வீதிகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆராய்வதற்காகவே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கிறார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து நடத்திய பேச்சுக்களை அடுத்தே பாதுகாப்பு அமைச

(2ஆம் பக்கம் பார்க்க)

### மாணவரின் பாதுகாப்பை உறுதிசெய்ய

## ஹாட்லி அருகே படைநிலையில் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி

வடமராட்சி,செப்.7

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகியவற்றின் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அந்த இரு பாடசாலைகளுக்கும் முன்பாகவுள்ள படையினரின் முன்னரங்க நிலையில் புத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் பிரசன்னமாகியிருப்பார்.

எதிர்வரும் திங்கட்கிழமை இவ்விரு பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கும்போது முன்னரங்க நிலைகளைப் படையினர் அகற்றாவிட்டால் கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவர் அங்கு பிரசன்னமாகியிருந்து மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்று பெற்றோர்கள் விடுத்த கோரிக்கையை கண்காணிப்புக்குழு ஏற்றுள்ளது.

இரு பாடசாலைகளையும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை பருத்தித்துறை சிவன் கோயிலில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்க்

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

காரைநகர் சம்பவம்

# கடற்படையினர் மீது ஒழுங்கு நடவடிக்கை

காரைநகர் பிட்டியெல்லைப் பகுதியில் கடந்த மாதம் 28ஆம் திகதி பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய கடற் படையினர் ஒழுங்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று காரைநகர் கடற்படை தளபதி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரியுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நேரடி விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.சந்திரசேகர மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் கடற்படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாக சாட்சியங்கள் கிடைத்துள்ளதால் தமது அலுவலகத்துக்கு வருமாறு காரைநகர் கடற்படைத்தளபதிக்கு அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்று காரைநகர் கடற்படைத் தளபதி மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு நேற்று சமுகமளித்தார். அவருடன் காரைநகர் கடற்படையின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியும் வந்திருந்தார்.

பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். சம்பந்தப்பட்ட கடற்படையினர் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிக்கை ஒன்றை விரைவில் சமர்ப்பிக்க விருக்கிறோம் என்று கடற்படை அதிகாரி ஆணைக்குழுவிடம் தெரிவித்தார். (ஐ-3-ரி)

# ஜனாதிபதி - பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவகாசம் வழங்கவும் சம்மதிக்கப்பட்டது.

அதன்படி, மேற்படி அரசமைப்புத் திருத்தத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதை மூன்று நாள்கள் தாமதிக்கவும் அரசுத்தரப்பு சம்மதித்தது.

ஆனால், ஜனாதிபதியும் - பிரதமரும் மீண்டும் வெள்ளிக்கிழமை (நேற்று) சந்திக்கும்போது தனது ஆலோசனைகளை ஜனாதிபதி தெரிவித்துவிடவேண்டும் என்று குறிப்பிட்டு ஜனாதிபதிக்கு மூன்றுநாள் கால அவகாசத்தையும் அரசதரப்பு வழங்கியது!

ஜனாதிபதியுடன் இணக்கம் காணப்பட்டால் அந்த இணக்கத்திற்கு அமைவான திருத்தங்கள் சம்பந்தப்பட்ட நகல் சட்டத்தில் செய்யப்படும் இல்லையேல் தற்போதைய வடிவத்திலேயே அது அமையும். இணக்கம் கண்டாலும் காணப்படாவிட்டாலும் உத்தேச அர சமைப்புத் திருத்த நகல் 9ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். 16ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படும் - இப்படி அரசுத் தரப்பில் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுக்காலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு கூடியது. 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் தற்போதைய வடிவை முற்றாக எதிர்ப்பது என அது தீர்மானித்தது. அதையடுத்து, அந்த நகலுக்குத் திருத்தம் எதனையும் சமர்ப்பிப்பதில்லை என ஜனாதிபதி முடிவுசெய்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்று இடம்பெறுமென எதிர்பார்க்கப்பட்ட சந்திப்பு இடம்பெறாமலேயே போயிற்று.

எனவே, ஜனாதிபதியின் முடிவைப் பார்க்காமல் இது விடயத்தில் தனது அரசுத் தரப்பின் பாதையில் நடவடிக்கைகளைத் தொடர பிரதமர் ரணில் தீர்மானித்துவிட்டார்.

இதன்படி, நாளைமறுதினம் திங்கட்கிழமை 19ஆவது அரசமைப்புத் திருத்தம் தற்போதைய வடிவத்தில் வர்த்தமானியில் பிரசுரமாகும்.

16ஆம் திகதி அது நாடாளுமன்றுக்கு வரும். எதிர்க்கட்சியில் கணிசமானோரின் ஆதரவோடு, தேவையான பெரும்பான்மையைப் பெற்று அந்தத் திருத்தத்தை சட்ட வலுவுடையதாக்கலாம் என்ற முழு நம்பிக்கையோடு அரசுத் தரப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், பொ.ஐ.முன்னணியிலிருந்து தேவையான எம்.பிக்களை அரசுத் தரப்பினால் வளைத்துப் பிடிக்க முடியாது என்ற நம்பிக்கை நேற்றைய பொ.ஐ.முன்னணி எம்.பிக்களின் கூட்டத்தின் பின் ஜனாதிபதிக்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் காரணமாகவே இந்த விடயத்தில் பிரதமருடன் சமரசம் காணும் திட்டத்தை அவர் தூக்கி எறிந்து முடிவெடுத்தார் என விடயமறிந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.(ஐ-3-4)

# ஆயுதம் பொருத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தங்கள் கடற்போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் படகுகளில் ஆயுதங்கள் பொருத்தி வைத்திருக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாக நான் இப்போது அறிகிறேன்.

புலிகளின் ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து அவர்களின் இன்னொரு கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அவர்கள் சென்றுவர அனுமதிப்பது தான் அரசின் நோக்கம் என நான் நம்புகின்றேன்.

இந்த நோக்கத்துக்காக, ஆயுதங்கள் பொருத்தப்பட்ட படகுகளை அவர்கள் பயன்படுத்த ஏன் அனுமதிக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகள் பலதடவைகள் மீறியபோதிலும் பாதுகாப்புப் படைகள் அப்படிச் செய்யவில்லை.

தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் முன்னைய யுத்த நிறுத்த உடன்பாடுகளின் பல அடிப்படை நிபந்தனைகளை மீறிய புலிகளின் கடந்தகாலப் போக்குகளைக் கவனிக்கும் போது இந்த நிலைப்பாடு சரியானது எனின் இது மிகவும் ஆபத்தானதாகும். - என்றும் ஜனாதிபதி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு எட்டிய - கேந்திர முக்கியத்துவம் மிக்க - நிலைகளுக்கு நீண்டதூர தாக்கு எல்லை கொண்ட பல ஆயுதங்களைக் கொண்டு வந்து புலிகள் நிறுத்தியிருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் ஜனாதிபதி இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

பாதுகாப்புக் கவுன்ஸிலை இது தொடர்பாக அவர் உஷார்படுத்தியுமிருக்கின்றார்.

"இந்தச் சூழ்நிலையில், ஆயுதங்கள் பொருத்தப்பட்டபுலிகளின் படகுகள் கடலில் சென்றுவர அனுமதிப்பது கடற்படைத்தளங்களுக்கும் ஆயுதப்படையினரின் முகாம்களுக்கும் பேராபத்தைத் தரக்கூடியது" - என்று ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த 16 ஆம் திகதி இந்தக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்த ஜனாதிபதி, நேற்றுமுன்தினம் இது தொடர்பாக மற்றொரு நினைவூட்டல் கடிதத்தையும் அவருக்கு அனுப்பிவைத்திருக்கின்றார். (ஐ)

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின் செயலாளரை யாழ்.சென்று நிலைமைகளை ஆராயுமாறு பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் பருத்தித்துறை மீன் சந்தை வீதி, கடற்கரை வீதி, துறைமுக வீதி, கல்லூரி வீதி, மடம் வீதி ஆகிய வீதிகளை உடனடியாகத் திறந்து பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்குமாறு தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் பிரதமரிடம் கேட்டுக் கொண்டனர்.

பிரதமருடனான நேற்றைய சந்திப்பில் தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் குமரகுருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதமருடன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோரும் உடன் இருந்தனர். (ஐ)

## பௌத்த பிக்குகள் குழு வருகின்றது

யாழ்ப்பாணம்,செப்.7

20 பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவொன்று சமாதான விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

ராமய நிக்காயாவின் செயலாளரான வண.வெவல்தெனியே மேதானந்தா தேரர் தலைமையில் வரும் இவர்கள் பல நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவிருக்கின்றனர். (ஐ-3)

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலர் வருகிறார்

யாழ்ப்பாணம்,செப்.7

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பி.டபிள்யூ.டி. சீ.ஜயதிலக உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று மாலை யாழ்.வருகிறார்.

இவர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.மேல்நீதிமன்றம், யாழ். மாவட்ட நீதிமன்றம் மற்றும் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மல்லாகம் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள குறைகளைக் கேட்டறிவார். அத்துடன், உலக வங்கியினால் அமைக்கப்படவுள்ள யாழ்.நீதிமன்ற கட்டடத்தொகுதி பற்றியும் அவர் ஆராய்வார்.

பின்னர் சாவகச்சேரிக்கு விஜயம் செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தை மீளவும் அங்கு ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளவுள்ளார்.

நாளை இரவு யாழ்.நீதிபதிகளினால் நடத்தப்படும் வரவேற்பு உபசாரத்திலும் அவர் கலந்துகொள்வார். (ஐ-8)

## தமிழ்க் கைதி ஒருவர் நேற்று விடுவிப்பு

கொழும்பு,செப்.7

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுக் களுத்துறைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த செல்லையா என்பவரை விடுவிக்குமாறு மேல்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பிரஸ்தாப நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப் பத்திரிகையை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றுக்கொண்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம புலிகளின் தலைவர்களில் ஒருவரான உதயன் என்பவருடன் சேர்ந்து வெடி மருந்துகளைக் கொண்டுசென்றார் என்று இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சந்தேக நபர் யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செல்வராஜாவின் முன்னிலையில் அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஐ)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானமாகச் சிந்திக்கவேண்டும் என்று மகா சங்கத்தினரைச் சந்தித்த பொழுது ஜனாதிபதி கூறியதை அவர் ஞாபகப்படுத்தினார்.

எவ்வாறாயினும், புதன் நள்ளிரவில் புலிகள் இயக்கத் தடைநீக்கப்பட்டபின் அது தொடர்பாக ஜனாதிபதி நேற்று வரை கருத்து எதனையும் கூறவில்லை என்றும் ஜனதாச பீரிஸ் கூறினார் (ஐ-4)

## ஹாட்லி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கண்காணிப்புக்குழு அதிகாரியான போல் எரிக் பிஜேக் மற்றும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.

இரு பாடசாலைகளின் மாணவர்களும் தமது கற்றல் செயற்பாடுகளை சுதந்திரமாக - அச்சமின்றி - மேற்கொள்ள வசதியாகப் பாடசாலைகளுக்கு முன்பாகவுள்ள காவலரண்களை அகற்றவேண்டும் என்று அங்கு வலியுறுத்தப்பட்டது.

அவ்வாறு காவலரண்கள் அகற்றப்படாத பட்சத்தில் கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் அங்கு பிரசன்னமாகியிருக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பங்குகொண்ட கண்காணிப்புக்குழு அதிகாரி இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்; உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ஐ-3-70-173)

# தேர், தீர்த்த உற்சவங்களில் திருடர்கள் கைவரிசை!

## பலரது நகை, பணம் 'அபேஸ்'

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா மற்றும் தீர்த்தோற்சவம் ஆகிய இரு உற்சவ தினங்களிலும் அடியார்கள் பலர் தங்கநகைகள், பணம் ஆகியவற்றை திருடர்களிடம் பறிகொடுத்துள்ளனர்.

பக்தர்களோடு பக்தர்களாகவும், வியாபாரிகளுடன் வியாபாரிகளாகவும நடமாடிய திருட்டுப் பேர்வழிகள் ஆலயத்துக்கு வருகைதந்த பெண்பக்தர்களிடம் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். நகைகளைப் பறிகொடுத்தவர்கள் அழுது புலம்பிய போதிலும், அவர்களுக்கு எதுவுமே மீண்டும் கிடைக்கவில்லை,

நேற்றுமுன்தினம் தேர்த்திருவிழா அன்று கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகக்கொண்ட முருகமூர்த்தி லீலாவதி (வயது51) என்பவரின் 5பவுண சங்கிலியும், கொக்குவிலைச்சேர்ந்த நாகராசா பொன்மணி (வயது70) என்பவரின் இரண்டரைப் பவுண் சங்கிலியும் திருடப்பட்டுள்ளன.

அத்துடன் வெளிநாட்டிலிருந்து வருகைதந்த ஒரு குடும்பத்தினரின் 50 ஆயிரம் ரூபா பணமும் அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தீர்த்தோற்சவத்தின் போதே அதிகளவிலான திருட்டுக்கள இடம்பெற்றுள்ளன. கல்வியங்காட்டைச் சேர்ந்த சற்குணநாதன் ஞானமலர்(வயது 63) என்பவரின் 2பவுண் சங்கிலி, உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த பூபாலு இராஜலட்சுமி (வயது 55) என்பவரின் ஆயிரத்து 100 ரூபா பணம், உடுவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் செல்லாச்சி (வயது 61) என்பவரின் 2பவுண் சங்கிலி, யாழ்பிறவுண் வீதியைச் சேர்ந்த சின்னராசா மகேஸ்வரி (வயது 55) என்பவரின் 3பவுண் சங்கிலி, கல்வியங்காட்டைச் சேர்ந்த சிவபாதம் புனிதவதி (வயது 60) என்பவரின் 2பவுண் சங்கிலி, மானிப்பாயைச்சேர்ந்த இராசதுரை சிவக்கொழுந்து (வயது 78) என்பவரின் 3 பவுண் சங்கிலி, அராலி கிழக்கைச் சேர்ந்த நாகேசு நவரத்தினம் (வயது 60) என்பவரது 300 ரூபா பணம், கோண்டாவிலைச்சேர்ந்த மார்க்கண்டு சியாமளா (வயது 25) என்பவரின் ஒன்றரைப் பவுண் கைச்சங்கிலி, ஏழாலை கிழக்கைச் சேர்ந்த குமாரசாமி தங்கம்மா (வயது 65) என்பவரின் 5பவுண் சங்கிலி, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை அன்னபூரணி (வயது 65) என்பவரின் இரண்டேகால் பவுண் சங்கிலி, நல்லூர், செட்டித் தெருவைச் சேர்ந்த தியாகராசா தங்கம்மா (வயது 63) என்பவரின் மூன்றரைப் பவுண் சங்கிலி என்பனவே திருடப்பட்டுள்ளன.

ஆலயச்சூழலில் தற்காலிகமாக இயங்கும் நல்லூர் பிரதேச செயலகத்தின் உற்சவகால சிறப்புச் செயலணி மற்றும் ஒழுக்காற்றுப்பேரவை அலுவலகத்தில் இவை குறித்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றைவிட இவ்வாறான மேலும் பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறறுள்ள போதிலும், முறைப்பாடுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (எ-10-69-86)

# நல்லூர் ஆலயச் சூழலில்!

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர் ஆலய உற்சவத்தின் பூங்காவனத் திருவிழாவான இன்று சனிக்கிழமை ஆலயச் சூழலில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

☆ நல்லூர் ஆலய வீதியில் லெப்டினன்ட் கேணல் திலீபன், தளபதி கேணல் கிட்டு ஆகியோரின் நினைவாக "புலிகளின் குரல்" நிறுவனத்தினால் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 10.30மணி வரை நடத்தப்படும் சிறப்புக் கலையரங்கில் மனோகரி சிவராமின் கதாப்பிரசங்கமும், போராளி இசையமைப்பாளர்களான இசைப்பிரியன், செயல்வீரன் ஆகியோரின் இசைவிருந்தும் நடைபெறும்.

☆ துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர்மன்றம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வில் மாலை 6மணிக்கு என்.செல்வச்சந்திரனின் நெறியாள்கையில் 'சாஸ்திரீய மெல்லிசை' இடம்பெறும். பாடகர்கள் ஆர்.குகானந்தன், எஸ். ஜெயகௌரி, என். ஜெயபாரதி. அணிசெய் கலைஞர்கள் - ஓகன் - என்.செல்வச்சந்திரன், வயலின் - ஏ.ஜெயராமன், புல்லாங்குழல் - ஐ.வசந்தன், கிற்றார் - ரி.சந்திரகாந், மிருதங்கம் - எஸ்.துரைராசா, தபேலா - எஸ்.சதாவேல்மாறன், எஸ்.விமல்சங்கர், ஒக்டோபாட் - ஏ.கேதீஸ்.

☆ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை வீதிப்பஜனையும், குருமூர்த்த ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று காலை 9 மணிக்கு சமய தீட்சை வழங்கப்படும். தொடர்ந்து புராண படனம் இடம்பெறும்.

☆ வட பிரதேச இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூவர் நாயன்மார் மடத்தில் இடம்பெறும் தெய்வீக இசை நிகழ்ச்சியில் மாலை 6 மணிக்கு சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் குழுவினரின் 'ஸ்ரீ வள்ளி திருமணம்' என்னும் தலைப்பில் வில்லிசை.

☆ நல்லூர் மகாசபையால் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் இசைப் பேருரையில் 'கர்ணன்' என்ற தலைப்பில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கம். (ஐ-ரி)

# தடைநீக்கத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னப் பேச்சுக்கள் வெற்றியடைய வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக இருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு புலிகளுக்கும் உண்டு.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளிலும் எமது கிளை அரசியல் வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றன.

எமது அரசியல் நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்வதில் இருந்த இடர்பாடுகள் தடைநீக்கத்தின் மூலம் களையப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் புலிகள் இயக்கத்தை பல வெளிநாடுகள் தடை செய்தமைக்கு அப்போது இங்கு ஆட்சியிலிருந்த அரசின் தவறான பிரசாரமும் அந்நாடுகளின் தவறான கருத்துமே காரணமாகும்.

புலிகளை வெளிநாடுகள் தடை செய்தமைக்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. புலிகளைத் தடை செய்துள்ள நாடுகளுக்கு எமது அமைப்பு எந்தவித அச்சுறுத்தலையும் ஒருபோதும் விடுத்திருக்கவில்லை.

ஆகவே, புலிகள்மீதான தடையை இலங்கை அரசு நீக்கியிருப்பது நிச்சயமாக புலிகளைத் தடைசெய்த நாடுகளின் தவறானதும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததுமான தீர்மானத்தை மறுபரிசீலனை செய்வதாக அமையும்.

எனவே, புலிகளைத் தடை செய்த நாடுகள் அந்தத் தடையை நீக்குவது தொடர்பாக மறுபரிசீலனை செய்யவேண்டும். தற்போது அதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது.

சமாதான முயற்சிகள் கடந்த காலங்களை விட முன்னேற்றகரமான திசையில் செல்கின்றன. பாதைகள் திறக்கப்பட்டுள்ளன, பொருளாதாரத்தடைகள் நீக்கப்பட்டுள்ளன, புலிகள் மீதான தடையும் நீக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் மக்கள் செறிவாக வாழும் இடங்கள், பாடசாலைகள், ஆலயங்களில் இருந்து படையினர் விலகி இராணுவ நெருக்குதல்கள் குறைக்கப்பட வேண்டும். பொது மக்கள் இயல்பாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். குறிப்பாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர வழிசெய்ய வேண்டும்.

சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் இருந்தாலும் மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாதது ஒரு பின்னடைவே. இது குறித்து நோர்வே ஊடாக அரசிற்கு தெரியப்படுத்தியுள்ளோம். அடுத்த கட்டமாக நடைபெறவுள்ள தாய்லாந்துப் பேச்சுகளின்போது யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருதரப்பும் ஏற்றுக்கொண்ட விடயங்களை நிச்சயமாக வலியுறுத்துவோம்

- என்றார். (ஐ-4)

# பலஸ்தீன தொழிற்சாலை இஸ்ரேலினால் நிர்மூலம்!

காஸாவிலுள்ள பலஸ்தீனர்களின் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை இஸ்ரேலிய ஹெலிகள் தாக்கி நிர்மூலமாக்கியுள்ளன.

வழமைபோன்று, இந்தத் தொழிற்சாலையில் ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டதாலேயே அது தாக்கி அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறுகின்றது.

"இந்தத் தொழிற்சாலை கான்யூனிஸ் பலஸ்தீன பொலீஸ் நிலையத்துக்கு அருகில் இருக்கின்றது. அங்கு பலஸ்தீனர்களுக்குரிய ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதாக நாங்கள் சந்தேகிக்கின்றோம்" - என்று இஸ்ரேலிய படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவேளை -

நேற்றுமுன்தினம் இரவு காஸாவில் பலஸ்தீன ஆயுததாரி ஒருவர் நடத்திய தாக்குதலில் இரு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். பதில் தாக்குதலில் அந்த ஆயுததாரியும் உயிரிழந்தார்.

மேற்குக்கரையில் நேற்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் குறைந்தது இரு பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் -

இஸ்ரேலிய நகருக்குள் கடத்திவரப்பட்ட 270 கிலோ வெடிப்பொருள்களை இஸ்ரேலியப் பொலீஸார் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தனர். கார் ஒன்றில் இந்த வெடிபொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

இஸ்ரேலில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வெடிப்பொருள்களிலேயே இதுதான் அளவில் பெரியது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# செப்.11 தேசபக்தி நாள்

நியூயோர்க்,செப்.7

நியூயோர்க்கில் இருந்த உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதும் வாஷிங்ரனில் பென்ரகன் கட்டடம் மீதும் தீவிரவாதிகள் விமானத்தைக் கடத்தி தாக்குதல் நடத்திய செப்ரெம்பர் 11ஆம் திகதியை தேசபக்தி நாளாகக் கடைப்பிடிக்குமாறு அதிபர் புஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நாட்டு மக்களுக்கு அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நியூயோர்கிலும், வாஷிங்ரனிலும் தீவிர வாதத்துக்குப் பலியான 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நம்இதயத்திலும் தேச வரலாற்றிலும் இடமுண்டு.

செப்ரெம்பர் 11ஆம் திகதி நடந்த சம்பவங்களையும், அமெரிக்க மக்கள தேசபக்தியோடும், துணிச்சலோடும் எதிர்கொண்டதையும் மறக்கமுடியாது.

ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் 11ஆம் திகதியன்று அமெரிக்கர்கள் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விட வேண்டும். 111 மாடிக் கட்டடத்தின்மீது முதல் விமானம் மோதிய காலை 8.46 மணிக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டும்.

இறந்தவர்களின் நினைவாக நடத்தப்படும் மெழுகுவர்த்தி அஞ்சலியிலும் பிரார்த்தனைக் கூட்டத்திலும் நினைவஞ்சலியிலும் அமெரிக்கர்கள் கலந்துகொள்ளவேண்டும்.

தீயை அணைப்பதில் உயிரை இழந்த தீ அணைக்கும் படையினருக்கும் மீட்புப்படையினருக்கும் அஞ்சலி செலுத்தும் அதேவேளை அவர்களது தியாகத்தால், நம் நாடு ஒற்றுமையையும் வலிமையையும் பெறுகிறது.

- இவ்வாறு புஷ் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார். (ம)

# ஈராக் பாதுகாப்பு தலைமையகம் மீது அமெ., பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கு!

## வழமைக்கு மாறாக பெருமெடுப்பில் நடத்தின

பக்தாத்,செப்.7

ஈராக்கிய வான் பாதுகாப்புத் தளங்கள்மீது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் நேற்று திடீரென பெரும் தாக்குதல்களை நடத்தியுள்ளன. 100 இற்கும் குறையாத விமானங்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டன என்று அறிவிக்கப்படுகின்றது.


மேற்கு ஈராக்கில் உள்ள வான் பாதுகாப்புத் தலைமையகமே இந்தத் தாக்குதலின் பிரதான இலக்கு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் வழமையாக நடத்தும் தாக்குதல்களைவிட இந்தத் தாக்குதல் மிகப் பெரிதாக இருந்தது.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேனை பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பான நடவடிக்கையை அதிபர் புஷ் ஆரம்பித்த பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் சண்டை விமானங்கள், குண்டுவீச்சு விமானங்கள், ராடரின் துணையுடன் செயற்படும் விமானங்கள் என்பன பயன்படுத்தப்பட்டன என்று அமெரிக்க படை வட்டாரங்கள் தெரிவித்தன. குறிக்கப்பட்ட மூன்று இலக்குகள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆனால், அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் போர் விமானங்கள் பொதுமக்கள் இலக்குகள் மீதே தாக்குதல் நடத்தின என ஈராக் அறிவித்துள்ளது. சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அது கூறியுள்ளது.


தாக்குதல் நடத்த விரையும் பிரிட்டிஷ் போர்விமானம்

ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக ஐ.நா.பாதுகாப்புச் சபையின் முக்கிய உறுப்பினர்களுடன் அதிபர் புஷ் நேற்று வெள்ளிக்கிழமை தொலைபேசியில் உரையாடினார். ஈராக்குக்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு அப்போது புஷ் அழுத்தம் கொடுத்தார்.

ஆனால், ஈராக்குக்கு எதிரான நடவடிக்கைக்கு முழுவதுமாக ஆதரவளிக்க பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் தயாராகவில்லை.

இதற்கிடையில் -

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எடுத்தால் அது அரபு நாடுகளை ஈராக்கின் பக்கம் சாய்ந்துவிடச்செய்யும் என்று அரபுலக நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.நாவின் ஆயுத பரிசோதகர்களை நாட்டுக்குள் அனுமதிக்க ஈராக் தொடர்ந்தும் மறுத்தால் ஈராக் மீதான இராணுவ நெருக்குதல் தீவிரமாகும் என்பதைத் தெரிவிக்கும் ஒரு சமிக்ஞையாகவே இந்த விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்று ஈராக்கிலுள்ள வெளிநாட்டு செய்தியாளர்கள் கருதுகின்றனர். (ம)

## அணு மின் நிலையங்கள்

இஸ்லாமாபாத்,செப்.7

பாகிஸ்தான் மேலும் இரு அணு மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது என்று பாக்.அணு சக்தி ஆணைக்குழுவின் தலைவர் பர்வீஸ் பட் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணம், சாஸ்மாவில் சீன உதவியுடன் ஓர் அணுமின் நிலையமும் கராச்சியில் கனடா நாட்டு உதவியுடன் ஓர் அணுமின் நிலையமும் ஏற்கனவே அமைக்கப்பட்டு, செயற்பட்டு வருகின்றன.


இதோ விற்பனைக்கு வந்துவிட்டது!



உங்களுக்கென இந்தியாவிலிருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்ட, அசல் சுத்தப் பட்டு நூலில் தயாரிக்கப்பட்ட புத்தம் புதிய ரக KOLAM PURE கோலம் சாறிகள்!

கண்ணைக் கவரும் ஒளி மின்னலடிக்கும் வண்ண வண்ண நிறங்களினாலான 142இற்கு மேற்பட்ட டிசைன்களில் சாறிகள்!

★ திருமண வைபவங்களா?
★ சுப காரியங்களா?
★ பட்டமளிப்பு விழாக்களா?
★ பூப்பு மங்கள விழாக்களா?
★ புதுமனைப் புகுவிழாக்களா?
★ விசேட நிகழ்வுகளா?

எந்த நிகழ்வாக இருந்தாலும் கவர்ச்சிகரமான தோற்றத்தில் நீங்கள் விழாவுக்குச் சமுகமளிக்கவேண்டுமல்லவா? ஆம்

கவலையை விடுங்கள்!

உங்கள் ஆடைத் தெரிவுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

மகாநதி புடவையகம்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/23708) 14, நவீன சந்தை, சாவகச்சேரி.



உ

திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணித் திங்கள் 23ஆம் நாள் நாளை (08.09.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.22 மணிமுதல் 10.58 வரை கன்னி லக்கினமும் அமிர்தயோகமும் உத்திர நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புதல்வன் ரமணகாந்தன் அவர்களுக்கும்



எமது ஏக புதல்வி சுதர்ஷிகா அவர்களுக்கும்

தெய்வத்தின் திருவருளுடனும் அன்பர்களின் நல்லாசியுடனும் வண்ணை ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் (யாழ்ப்பாணம்) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி குணபதி சிவசுப்பிரமணியம்
101/14, கந்தசுவாமி கோயில் வீதி,
திருகோணமலை. (8017)



திரு.திருமதி V.S. சிவரட்ணம்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
(2A பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)


# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

I. மாநகராட்சி மன்றத்தின் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக அனுமதி பெறாது தொழில்கள் நடத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பின்வரும் வியாபார/தொழில்கள் நடத்துவதற்கு அனுமதிகோரும் விண்ணப்பங்களை இன்றிலிருந்து ஒருவார காலத்துக்குள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்பே அவற்றை நடத்துதல் வேண்டும்.

1. விடுதியுணவகம், விடுதியகம் ஒன்றை வைத்திருத்தல்
2. உறையகம் ஒன்றை வைத்திருத்தல்

II. நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட விதிகளின் பிரகாரம் வதிவிடமாகப் பாவித்துவரும் ஓர் ஆதனத்தை வேறு நோக்கங்களுக்காகப் பாவிப்பதாயின் அதற்குரிய கட்டணங்களை இச்சபையில் செலுத்தி தொடர்பான உபவிதிகளுக்கமைவாக அங்கீகாரத்தைப் பெற்றபின் நடத்துதல்வேண்டும்.

மேற்படி அறிவித்தலுக்கு மாறாக நடத்துபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் பொதுமக்களின் தகவலுக்காக அறியத்தருகின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
06.09.2002. (C/23714)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# அழைப்புக் கட்டளை

மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

இராசா துரைசிங்கம்
33, ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

வழ.இல.:மணநீக்கம்/319

- வழக்காளி -

எதிர்

துரைசிங்கம் பெண் லைலாராணி
செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

- எதிராளி -

மேற்படி எதிராளிக்கு,

மேற்படி வழக்காளி தங்களிடமிருந்து மணநீக்கம் பெறுவதற்கு இந்நீதிமன்றத்தில் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார். அதற்கு உமது மறுமொழி எதாவது இருப்பின் 2002ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப் படுவதோடு சொல்லப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மறுமொழியினை அணைக்கத்தவறும் பட்சத்தில் வழக்கானது நீங்கள் இல்லாமலே நடத்தப்பட்டு விளங்கப்படும் என்பதை நீவீர் அறிந்துகொள்ளவும். பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்டமுறையான அறிவித்தல்கள் யாவற்றையும் சேர்க்கக்கூடிய விலாசம் ஒன்றை மன்றில் கோப்பிடுமாறும் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

2002 ஆம் ஆண்டு 08 மாதம் 29 ஆந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு: சி.வீரகத்திப்பிள்ளை
வழக்காளி சட்டத்தரணி

(7939)

# எமது அருமை மகள் கவிதா அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி கவிதா சின்னையா

மண்ணில்
16-12-1980

விண்ணில்
02-09-1997

திதி: பிரதமை

எம் அன்புக்கினிய கவிதா
வானத்து
வண்ணத் தாரகை ஒன்று
நிலத்திடை வீழ்ந்த அந்த
வெற்றிடத்தை நிரப்ப எண்ணி
வானமகள் உன்னை அழைத்தனளோ?
நீ
வான் வெளியில் கலந்தனையோ?
ஏன்?
மோனத்துயில் கொண்டாய்?
"மோகன" கீதம் பாடி
மகிழ்ந்திருந்த வேளையிலே
எமை மட்டும் "முகாரி" பாடவிட்டு
நீ
மௌன கீதம் இசைப்பதென்ன?
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா: திரு.திருமதி சின்னையா,
சகோதரர்கள்: திரு.சி.மாறன் (சுவிஸ்),
திரு.சி.திருமாவளவன் (சுவிஸ்),
சகோதரிகள்: திருமதி ந.திருமலர் (சுவிஸ்),
திருமதி ம.திருமகள் (ஜேர்மனி),
திருமதி தெ.திருவளர்செல்வி (ஜேர்மனி),
மைத்துனிமார்கள்: திருமதி மா.கல்யாணி (சுவிஸ்),
திருமதி தி.சர்மிளா (சுவிஸ்),
மைத்துனர்மார்: திரு.ம.நவநீதன் (சுவிஸ்),
திரு.அ.மகிழ்நபன் (ஜேர்மனி),
திரு.பொ.தெய்வேந்திரன் (ஜேர்மனி),
பெறாமக்கள்: திவாகர், சிவன்யா, பானுஷா (சுவிஸ்),
ஓவியா, ஆதவன், ஆகாஸ் (ஜேர்மனி),
மருமகள்: கவிசனா (சுவிஸ்).

*"கவிதாலயம்"*
*இல.6, நொத்தாரிஸ் லேன்,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*

(7886)

## உடுவிலில் சைக்கிள் திருட்டு

வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியொன்று திருட்டுப்போயுள்ளது. இச்சம்பவம் உடுவில் பெரியமதவடிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் முன்பாகச் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்று சிறிது நேரத்தில் திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்ததாகக் கூறப்பட்டது.(எ-27)

## சாட்டி ஆலய திருவிழா திகதி மாற்றம்

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத தலமான சாட்டி புனித சிந்தாத்திரை மாத ஆலயத்திருவிழா இம்முறை திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வருடந்தோறும் செப்ரெம்பர் 24 ஆம் திகதி நடைபெற்றுவந்த இத் திருவிழா இம்முறை செப்ரெம்பர் 21 ஆம் தகதி நடைபெறவுள்ளதாக ஆயர் இல்லச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக கிழமை மாலை நற்கருணை ஆராதனையும், 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படுமெனவும் -

இவ்விழாவுக்காக யாழ்நகரிலிருந்து போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

ஆலய பங்குத்தந்தை எரிக்றொசான் அடிகளார் தெரிவித்தார்.மாணவர்கள், அரச ஊழியர்களின் வசதிகருதியே இத்திருவிழாத் திகதி மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

## தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிக்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்,செப்.6

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசங்களில் தியாகி திலீபனின் 15ஆவது ஆண்டு நினைவு தினத்தை எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் 26 ஆம் திகதிவரை சிறப்பாக அனுஷ்டிப்பது என்று சண்டிலிப்பாயில் நடைபெற்ற சங்கானை, சண்டிலிப்பாய பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் ஞா.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராம ரீதியாகவும், முக்கிய சந்திகளிலும் தியாகி திலீபனின் திருவுருவப் படத்தை வைத்து அஞ்சலி செலுத்துவது என்றும் -

இறுதி மூன்று தினங்களிலும் விசேட நிகழ்வுகளை நடத்துவது என்றும் - தீர்மானிக்கப்பட்டது.(எ-135)

## காரைநகர் ப.நோ.கூ.சங்கம் கிராமிய வங்கி மீதி உறுதிப்படுத்தல் 31-08-2002

மேற்படி ப.நோ.கூ.சங்கத்தின்கீழ் இயங்கும் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது

நிலையான வைப்பு
நிலையான வைப்பு மாதவட்டி
சேமிப்பு வைப்பு
பராயமடையாதோர் சேமிப்பு வைப்பு

மீதிகளை 09.09.2002ஆம் திகதி தொடக்கம் 14-09-2002ஆம் திகதிவரை சங்க கடமை நேரத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

குறிப்பு: 31.08.2002 சங்கத்தின் நிதியாண்டுக்குரிய எண்பார்வையின் பொருட்டு மேற்படி மீதிகள் உறுதிப்படுத்தப் படுகிறது.

பொதுமுகாமையாளர்,
ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.

(C/23677)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆவணி மாதம் 23ஆம் நாள் நாளை (08.09.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.28 மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**குணாபரன்**
(குணா)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**நிரஞ்சலா**
(நளினி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்.மணிக்கூட்டு வீதி, அரசடிப் பிள்ளையார் கோயில் **ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தில்** திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: நாளை மறுதினம் (09-09-2002) திங்கட்கிழமை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி கதிரவேலு நாகபூசணி
பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

திரு.திருமதி இ.பஞ்சாட்சரம்
(யாழ்.மாநகரசபை)
83/5, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

(7837)

உ

# விவாக சோபன அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சித்திரபானு வருஷம் ஆவணி மாதம் 23ஆம் நாள் நாளை (08.09.2002) ஞாயிற்றுக்கிழமையும் சுக்லபக்ஷ துதியைத் திதியும் உத்திர நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 7.17 முதல் 8.31 மணிவரை வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில்

*நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் தேவஸ்தானம்*
*பிரம்மஸ்ரீ குருசாமிக் குருக்களின் பௌத்திரியும்*
*பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்களின்*
*புத்திரியுமாகிய*
சௌபாக்யவதி
**யோகாம்பிகையை**

*கும்பகோணம், பிரம்மஸ்ரீ சுப்ரமணிய ஐயர்*
*அவர்களின் பௌத்திரனும்,*
*பிரம்மஸ்ரீ ஸ்ரீ இரங்கஸ்வாமி ஐயர்*
*தம்பதிகளின் ஏக புத்திரனுமாகிய*
சிரஞ்சீவி
**சுப்ரமண்ய சர்மாவுக்கு**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்ரஹணம் மணமகள் இல்லத்தில் நடைபெற நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார், நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையாரின் அனுக்கிரகத்துடனும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆசியுடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்ட மித்ர குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் : *மணமகன் இல்லத்தில் அன்று அதிகாலை 4.00 மணி 5.30 மணி*
வரவேற்பு : *மணமகள் இல்லத்தில் அன்று மாலை 6 மணிமுதல் நடைபெறும்.*

*தங்கள் நல்வரவை நாடும்:*

ஸ்ரீமதி சா.குமாரசாமிக் குருக்கள்
பிரம்மஸ்ரீ கு.மணிக்குருக்கள்,
ஸ்ரீ ஸ்ரீமதி கு.கோபாலன் சர்மா லக்ஷ்மிதேவி
தம்பதிகள், பிரம்மஸ்ரீ கு.ஆனந்தசர்மா.

பிரம்மஸ்ரீ சு.ஸ்ரீ இரங்கஸ்வாமி ஐயர்,
ஸ்ரீமதி இ.பராசக்தி (சாரதா).

*(இரு வீட்டார் அழைப்பு)*

*கைலாச பிள்ளையார் தேவஸ்தானம், நல்லூர்.*

*குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*

(C/23699)

உதயன்

## தடைநீக்கத்தின் தாற்பரியம்

"விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் தற்காலிகமானது அல்ல. காலவரையறை குறித்துச் செய்யப்பட்டதும் அல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின்படி புலிகள் மீது தடை விதித்த இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர், அதனை இப்போது நீக்கியிருக்கின்றார். தேவைப்பட்டால் புலிகள் இயக்கம்மீது மீண்டும் அவர் தடை விதிக்கலாம். ஆனால், அத்தகைய நிலைமை மீண்டும வராது என்று அரசு நம்புகின்றது."

- இப்படி பாதுகாப்பு அமைச்சுடன் நெருங்கிய தொடர்புடைய உயர்மட்ட அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"புலிகள் மீதான தடை நீக்கம் தற்காலிகமானது. மாதாந்தம் மீள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுவது" - என்று தடை நீக்கம், நிபந்தனையுடன் செய்யப்பட்டிருப்பதுபோல மாயத் தோற்றத்தை ஏற்படுத்திவந்த சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அத்தகைய பிரசாரம் தவறானது என்பதை மேற்படி அதிகாரி தெரிவித்திருக்கும் கருத்து அடித்துக்கூறுகிறது.

புலிகள்மீது இதுவரை காலமும் விதிக்கப்பட்டிருந்த தடையின் தாற்பரியம் மற்றும் அதன் செல்லுபடித்தன்மை குறித்தும்கூட அந்த அதிகாரி தெளிவுபடுத்தினார்.

1998 ஜனவரி 26ஆம் திகதி - தலதா மாளிகை மீதான தாக்குதலை அடுத்து - விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அப்போது நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் - பொதுசனப் பாதுகாப்பு சட்டத்துக்கு அமைய - புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டது. மாதாமாதம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு வந்ததால் அதன்கீழ் இத்தடையும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால், 2001 ஜூனில் பொதுஜன ஐக்கிய முன்னணி அவசரகாலச் சட்டத்தை நீடிக்கமுடியாமல் நெருக்கடியை எதிர்கொண்டது. அதையடுத்து அவசரகாலச் சட்டம் காலாவதியானது.

அவசரகாலச் சட்டம் காலாவதியானதோடு தலதா மாளிகை மீதான தாக்குதலை அடுத்து புலிகள்மீது விதிக்கப்பட்டிருந்த தடையும் காலாவதியாகிப்போனது.

எனினும், ஜனாதிபதி குமாரதுங்க, தாம் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் ஒழுங்குவிதிகளை பின்னர் அறிவித்தார்.

அதாவது, பாதுகாப்பு அமைச்சரின் ஒழுங்கு விதிகளின் (Regulations) கீழ்தான் கடந்த ஒரு வருட காலமாக புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்தது. மற்றப்படி சட்டத்தின் (Law) கீழ் அல்ல.

இந்த ஒழுங்குவிதிகளில் கூட, ஒழுங்குவிதிகளை மீறுவோருக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கை மற்றும் தண்டனைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகரான அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்ற ஆங்கில நூல் வெளிவந்தபோது, தடைசெய்யப்பட்ட இயக்கம் சார்பான நூலை இலங்கையில் தடை செய்ய வேண்டும் என்று சில வட்டாரங்களில் வற்புறுத்தப்பட்டது. ஆனால், தடை மீறப்படும்போது எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் பற்றியோ, என்ன தண்டனை வழங்குவது என்பது பற்றியோ ஒழுங்குவிதிகளில் எதுவும் குறிப்பிடப்படாத நிலையில் நூலைத் தடை செய்யும் விடயத்தை அப்படியே கைவிடவேண்டியதாயிற்று.

புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களை அரசினர் தெளிவற்ற ஒழுங்குவிதிகளின் கீழ் தடை செய்திருந்தனர். பயனற்ற அந்த ஒழுங்குவிதிகள் இப்போது அகற்றப்பட்டிருக்கின்றன. அவ்வளவு தான்.

இப்படி அந்த அதிகாரி விளக்கமளித்தார்.

வெறும் ஒழுங்குவிதிகளின் கீழ் செய்யப்பட்டிருந்தாலும் தடை என்பது ஒரு முக்கிய விவகாரம்.

சிங்களப் பேரினவாதிகளின் காட்டுக் கூச்சலையும் மீறி அத்தடையை நீக்கும் நிலைக்கு அரசுத்தரப்பைப் பணியவைத்தது புலிகளின் இராஜதந்திரமே.

தொடரும் பேச்சுக்களில் இதுபோன்ற இராஜதந்திர நகர்வுகள் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் புலிகள் விடாப்பிடியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை இப்போது வலுவடைந்திருக்கிறது.

---

### வலிகாமம் மேற்கில்

# போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவுள்ள வீதித்தடைகளை அகற்றக் கோரிக்கை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.7

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் வீதி விபத்துக்களுக்கு ஏதுவான முறையில், தேவையற்ற விதத்தில் வீதிகளில் காணப்படும் தடைகள் உடனடியாக அகற்றப்படவேண்டும் எனக்கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

☆ சங்கானை ப.நோ.கூ.சங்கம், கடந்த பல மாதங்களாக பொதுமக்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தைக் குறித்த கால எல்லைக்குள் விநியோகிப்பதில்லை. இது குறித்து சங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

☆ தொலைபேசிச் சேவையை விரிவுபடுத்தும் வகையில் கேபிள் இணைப்புக்களை சண்டிலிப்பாயில் இருந்து வலி.மேற்குப் பிரதேசங்களுக்கு விஸ்தரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளல்.

☆ பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.

☆ வலி.மேற்கில் போக்குவரத்துக்குத் தடையாகவிருக்கும் வீதித்தடைகளை அகற்றி உதவுமாறு படைத்தரப்பிடம் கோருதல். (எ-9-175)

---

# கஷ்டப் பிரதேச பாடசாலைகளாக தீவகத்தில் 39 பாடசாலைகள் தெரிவு

மண்டைதீவு,செப்.7

தீவகக் கல்வி வலயத்திலுள்ள முப்பத்தொன்பது பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு கஷ்டப் பிரதேச ஊக்குவிப்புப் படிகளும் வழங்கப்படவுள்ளன.

"தேசிய ஆசிரிய இடமாற்றக்கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக, கஷ்டப் பிரதேச பாடசாலைச் சேவையை நிறைவேற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு முறையொன்றை செயற்படுத்துதல்" என்ற அரசாங்க சுற்றறிக்கைக்கு அமைவாகவே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தீவகத்தில் தற்பொழுது இயங்கும் 52 பாடசாலைகளில் 32 பாடசாலைகள் அதிகஷ்டப் பாடசாலைகளாகவும், 7 பாடசாலைகள் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும் கல்வி, உயர் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது தீவகத்தில் இயங்காதிருக்கும் 24 பாடசாலைகள் இத்திட்டத்தின்கீழ் உள்ளீர்க்கப்படவில்லை.

கஷ்டப் பிரதேசங்களில் இயங்கும் பாடசாலைகளில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதன்மூலம் வசதியான பாடசாலைகளில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் கற்றல், கற்பித்தல் வாய்ப்புகளை கஷ்டப்பிரதேச மாணவர்களும், நெருக்கமாக, தொடர்ச்சி முறிவின்றி பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாதாரணமாக ஆசிரிய சேவையிலுள்ள ஒருவர் மூன்று வருட கஷ்டப்பிரதேசப் பாடசாலைச் சேவையை நிறைவு செய்யவேண்டும் என்பது பொதுவிதி.

இந்த மூன்று வருட சேவைக்கு மேலாக அதேபாடசாலையில் அல்லது அதேபோன்ற வேறொரு பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றும் ஒருவருக்கு ஊக்குவிப்புச் சம்பளப்படியாக மேலதிக சம்பள ஏற்றம் வழங்கப்படும். தொடர்ந்து சேவையாற்றும்பொழுது ஒன்றுவிட்டு ஒன்றாக அடுத்துவரும் வருடங்களில்(இரண்டு வருடத்திற்கு ஒருமுறை) இந்த ஊக்குவிப்பு வழங்கப்படும்.

மேலும் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களது சம்பளத்தின் குறித்த ஒரு வீதம் (10% - 15%) ஊக்குவிப்பாக கொடுக்கப்படும்.

இந்தப் 'போனஸ்' கொடுப்பனவு 01.06.96இல் வழங்கப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் இருந்தே கணிக்கப்படும்.

. தீவகத்தின் அதிக கஷ்டப் பாடசாலைகளாக பெரும்பாலும் கடல்கடந்த (வீதியால் அல்லது தாம் போதியால் தொடுக்கப்படாத) தீவுகளின் பாடசாலைகளே அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்குப் புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன. 60 புள்ளிகளுக்கு மேற்பட்ட பாடசாலைகள் கஷ்டப் பாடசாலைகளாகவும்(Difficult Schools) 65 புள்ளிகளுக்கு மேல் பெற்றவை அதிகஷ்டப் பாடசாலைகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தீவகப் பாடசாலைகளில் மூன்று வருடத்திற்கு மேலாகத் தொடர்ச்சியாகக் கடமையாற்றும் ஆசிரியர்களின் 01.06.96இற்குப் பிந்திய சேவை விவரத்தைப் பாடசாலைகளில் இருந்து வலயக் கல்வி அலுவலகம் கோரியுள்ளது. (ம-ரி)



நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தின் ஆரம்பத்தில் கொடிச்சேலை ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள ஸ்ரீமுருகன் ஆலயத்திலிருந்து செங்குந்த மரபு மக்களால் கொடிச்சேலை அழகிய தேரில் எடுத்துவரப்படுவதையும், தொண்டர்கள் கொடிச்சேலையைச் சுமந்து செல்வதையும் படங்களில் காணலாம்.

---

### குருநாகல் போதனா மருத்துவமனையில்

# அதிதீவிர கண்காணிப்புப் பிரிவில் வைரஸ் தொற்றில் அறுவர் பலி!

கொழும்பு,செப்.7

குருநாகல் போதனா வைத்தியசாலை அதிதீவிர கண்காணிப்புப் பிரிவில் வைரஸ் கிருமி தொற்றியதனால் இதுவரை ஆறுபேர் இறந்துள்ளனர் என வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஆனந்த குணசேகர அறிவித்துள்ளார்.

அதிதீவிர கண்காணிப்புப் பிரிவில் கடமையாற்றும் தாதிமாரின் கவனயீனத்தால் அறுவரின் உயிர் பறிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

சுவாசத்திற்கு மூக்கு வழியாகச் செலுத்தும் உபகரணத்தில் ஆள் கொல்லி வைரஸ் தொற்றியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அளவில் இந்தச் சிகிச்சைப் பிரிவு சுத்தம் செய்யப்பட்டு இயக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 29ஆம், 30ஆம் திகதிகளில் இந்த மரணங்கள் சம்பவித்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

இந்த அறுவரின் தொடர் மரணங்கள் வைத்தியசாலையில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. (ஜ)

**நாளை**

ஆவணி 23
ஞாயிற்றுக்கிழமை
(08.09.2002)
திதி : பிரதமை
காலை 7.12வரை.
துதியை
பின்னிரவு : 4.48 வரை
நட்சத்திரம் : உத்தரம்
முன்னிரவு 7.04வரை.
சுபநேரம் : 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மனக்கிலேசம் என்பது மனிதனது வாழ்வையே கேள்விக்குறியாக்கிவிடும்.

---

# உள்ளூராட்சி தேர்தல் பணியில் யாழ்.அலுவலகம் மும்முரம்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் யாழ்.மாவட்ட தேர்தல் அலுவலகம் முழுவீச்சில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

தேர்தல் பணிக்கான உத்தியோகத்தர் நியமனம், வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது, வாக்காளர் அட்டைகள் தயாரிப்பது போன்றவர்கள் உள்ளிட்ட சகல பணிகளுக்கும் உரிய முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தேர்தல் அலுவலகத்தின் செயற்பாடுகள் வேறு சில திணைக்கள அலுவலகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

திட்டமிட்டபடி எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறலாம் என்ற நம்பிக்கையுடன் தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் நடைபெறுவதாக யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-11)

# புலமைப் பரிசில் பரீட்சையில் இனி மேலதிக மொழி அறிவுக்கு புள்ளிகள்

சிங்கள மொழியை தமிழ் மாணவர்களும் தமிழ் மொழியை சிங்கள மாணவர்களும் அறிந்துகொள்ளும் நோக்கில் அடுத்த ஆண்டுமுதல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக மொழி அறிவுக்கு புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

தமிழ் மாணவர்களுக்கு சிங்கள அரிச்சுவடு பற்றியும் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் அரிச்சுவடு பற்றியும் மேலதிக மொழி அறிவு வழங்கப்படும். பரீட்சையில் இதற்கு மேலதிக புள்ளியாக 10 வழங்குவது என அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி அமைச்சர் வி.ஜே.எம்.லொக்குபண்டார சமர்ப்பித்த இந்தத் திட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ம)

## ZION CHURCH, JAFFNA
## சீயோன் தேவாலயம்
## யாழ்ப்பாணம்.

"தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரைத் தொழுதுகொள்பவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்றார். யோவான்: 4:24"

| | |
|---|---|
| ஞாயிறு ஆராதனை | காலை 9.30 புதிய நேரம் |
| | மாலை 5.15 புதியநேரம் |
| ஞாயிறு பாடசாலை | காலை 8.30 மணி புதியநேரம் |
| வாலிபர் கூட்டம் | ஞாயிறு மாலை 4.00 மணி புதியநேரம் |

**தேவனைத் தொழுதுகொள்ள யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**24, இராமையா செட்டியார் ஒழுங்கை,**
**(சம்பந்தன் கிளினிக் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

(7901)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 20 - 05 - 1946

மறைவு 08 - 08 - 2002

### அமரர் சிவக்கொழுந்து கந்தசாமி

*(வர்த்தகத் திணைக்கள ஊழியர்)*

எங்கள் அன்பு மாமாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாருக்கு எங்களுடைய இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*23/1, முதலியார் வீதி,*
*நாவலர் றோட்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

- மருமக்கள்:
இராசேந்திரம், சிவமணி, புஸ்பராணி, சரஸ்வதி, தியாகேஸ்வரி (7703)

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கேள்விச்சபைத் தலைவரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2002.09.25ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விகாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01. | யா/நெல்லியடி ம.ம. வித்தியாலய மாணவர் விடுதித் திருத்தம் | ரூ. 750/- | 20,000/- |
| 02. | யா/நெல்லியடி ம.ம. வித்தியாலய மாணவிகள் விடுதித் திருத்தம் | | |

1. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD ) நிறுவனத்தின் தரம் எம் 07ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
2. விண்ணப்பதாரி இரு வேலைகளுக்கும் விண்ணப்பிக்கவேண்டும். தனியாக ஒரு வேலைக்கு மட்டும் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களில் பொருள்கள் சேவைவரி (ஜீ.எஸ்.ரி.) சேர்க்கபபட்ட கேள்வித் தொகை, பொருள்கள் சேவைவரி (ஜீ.எஸ்.ரி.) சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல்வேண்டும்.
4. வேலைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப்பணத்தை தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று, வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2002.09.09ஆம் திகதி தொடக்கம் 2002.09.16ஆம் திகதிவரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. இரு வேலைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் வெவ்வேறாக இரணைப் பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியும், இணைப்பிரதியும் தனித்தனி கடித உறைகளில் இடப்பட்டு உறைகளில் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல்வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட ஒவ்வொரு வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு "*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்*" என முகவரியிட்டு, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விப்பத்திரப் பெட்டியில் 2002.09.25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழையான கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை வடமராட்சி வலய பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

சி.சிவராசா,
கேள்விச்சபைத் தலைவர்,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்.மாவட்டம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

(சி-23692)

## மூன்றாவது வருட கண்ணீர்க்காவியம் - அஞ்சலி



தோற்றம் 07-01-1977

மறைவு 10-09-1999

### அமரர் குணசிங்கம் ஞானேந்திரன் (குட்டி)

(கண்ணன் - உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

*எம் இல்லத்தின் ஞானதீபமே! நீயின்றி*
*எம் வீடு ஒளியிழந்து போயிற்றே! என் செய்வோம்?*
*நீ எங்கு சென்றாய் கண்ணா? குட்டி!*
*முருகப் பெருமானின் அருள்வேண்டி நீ தினமும்*
*தவறாது பிரதிஷ்டை செய்து வந்தாயே! அந்த*
*இறைவனும் உன் அன்புக்கு, பக்திக்கு*
*முதலிடம் கொடுத்தாரோ? நல்லூர்*
*பூங்காவனம் அன்று - நீ அந்த*
*இறைவனின் குழந்தையாக அவதாரம்*
*எடுக்கச் சென்றாயோ கண்ணா?*
*பார்த்திருந்தோம் நீ ஓடோடி வருவாயென்று*
*ஏமாற்றம் தான் கிடைத்ததையா எமக்கு!*
*வேர்த்து விறுவிறுக்க விரைந்து வந்தே எம்*
*வேதனைகள் மாற்றும் ஞானேந்திரா!*
*ஈர்த்து விட்டாயடா எங்கள் மனதை*
*எங்கு தான் ஓடி மறைந்திட்டாயோ?*
*கழுதினில் வந்து காட்சி தாராயோ? கண்ணா!*
*புண்ணிலே வேல் நுழைந்ததைப் போல் நாம்*
*புழுவாய்த் துடிக்கின்றோமே பூமியிலே!*
*கண்ணா! இனி எமக்கு யாரடா துணை?*
*வெண்ணிலா இல்லாத வானமாய் எம் வீடு*
*வெறிச்சோடிக் கிடக்குதையா! மகனே!*
*மண்ணிலே உன் நினைவு மட்டும் எமது*
*மனதையே வாட்டி நிற்குதையா!*

*158/1, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உன் பிரிவினால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
அம்மம்மா, அத்தான், மருமகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(சி-23681)

# நாட்டையே கலக்கிய ரத்வத்தையை உலுக்கும் வங்கிப்பெட்டக விவகாரம்

**ஒரு காலத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர். முப்படை அதிகாரிகளும் கட்டளைக்குக காத்திருந்தனர். ஆனால் இன்று அவரது வங்கிப் பெட்டகங்களை சோதனையிடுவதற்கு முன்னர் அவரின் கீழ் பணிபுரிந்த பொலீஸ் அதிகாரிகள் நீதிபதிகளிடம் அனுமதி கோரிக்காத்திருக்கின்றனர். ரத்வத்தையின் வங்கிப் பெட்டக விவகாரத்தை ஆராயும் இந்தக் கட்டுரை 'ஞாயிறு லங்கா தீப' பத்திரிகையில் வெளியானது. அதன் தமிழாககத்தை இங்கு தருகிறோம்.**

அனுருத்த ரத்வத்தை கடந்த சில ஆண்டுகளாக ஊடகங்களின் செய்திகளில் தினமும் இடம்பெற்று வந்த ஓர் அரசியல்வாதியாவார். வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கெதிராக இடம்பெற்ற யுத்தத்தை வென்றெடுத்த வீரரெனவும் அவர் ஒருசமயம் பிரபல்யப்படுத்தப்பட்டார். 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி விடுதலைப் புலிகள், தாம் ஸ்ரீலங்கா அரசுடன் செய்து கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு மூன்றாம் ஈழப் போரை ஆரம்பித்தனர். அரச தரப்பில் அந்த யுத்தத்துக்கு முகம்கொடுக்கும் பொறுப்பு அப்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தையிடம் ஒப்படைக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த ஜனாதிபதியால் அவருக்கு மேலதிக பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

'ரிவிரச' தொடக்கம் 'ஜயசிகுரு' வரையான இராணுவ நடவடிக்கைகள் ரத்வத்தையின் வழிகாட்டலில் இடம்பெற்றன. ரிவிரச இராணுவ நடவடிக்கைமூலம் விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை விடுவித்தமைக்காக, 1995 டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதியினால் விசேடமாகக் கௌரவிக்கப்பட்ட அதிர்ஷ்டசாலியாக ரத்வத்தை விளங்கினார். அன்றுமுதல் இடம்பெற்ற அனைத்து இராணுவ நடவடிக்கைகளின்போதும் ரத்வத்தை யுத்த முனைகளுக்கு நேரில் சென்று வழி நடத்தியதாக ஊடகங்கள் தெரிவித்தன.

கடந்த பொதுத்தேர்தலின்போது அவரது நடவடிக்கைகள் யுத்த நடவடிக்கைபோன்றே அமைந்தன. அவரது பொதுசன ஐக்கிய முன்னணி மேற்கொண்ட தேர்தல் நடவடிக்கைகள் வன்முறை நடவடிக்கைகளாய் அமைந்ததால், அப்போதும் அவர் ஊடகங்களின் அவதானிப்புக்கு உள்ளானார். விசேடமாக, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்களின்போது, கண்டி உடதலவின்ன பிரதேசத்தில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கெதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்ட குழுவினர் கொலை செய்யப்பட்டனர். அக்கொலைச் சந்தேகநபர்களாக ரத்வத்தையும் அவரது இரு புதல்வர்களும் தடுத்து வைக்கப்பட்டனர்; கடந்த சில மாதங்களாக பத்திரிகைகளில் இதுபற்றி தலைப்புச் செய்திகளாகப் பிரசுரிக்கப்பட்டன.

சில மாதங்களைச் சிறைக்கூடங்களில் கழிக்காமல் பதிலாக சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் வைத்திய சிகிச்சை பெற்றமை ரத்வத்தையின் பெயர் செய்திகளில் அதிகமாக இடம்பெறக் காரணமாக அமைந்தது. அதன் பின்னர் அவர் பிணையில் வெளிவந்து சில நாள்களே கழிந்துள்ள நிலையில், அவர் சம்பந்தமான செய்திகள் மீண்டும் ஊடகங்களில் பிரதான செய்தியாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

ரத்வத்தையின் சொந்தச் சேமிப்பிலுள்ள பணத்தொகை பற்றி வெளிவந்துள்ள விவரங்களே இத்தடவை செய்தி ஊடகங்களின் பிரதான செய்தியாக அமைந்துள்ளது. இரகசியப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையிலுள்ள பாதுகாப்புப் பெட்டகத்தைப் பொலீஸார் சோதனையிட முயன்றதுடன் இந்தப் படலம் ஆரம்பமாகியது. அப்பாதுகாப்புப் பெட்டகம் அவருடைய பெயரிலும் அவரது மனைவியான ரமணி ரத்வத்தையின் பெயரிலும் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. அதற்குள் பெருந்தொகையான பணமும், சிறிய ரக ஆயுதங்கள் சிலவும் வைக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலீஸாருக்குக் கிடைத்த



ஹற்றன் நஷனல் வங்கியில் சோதனையின்போது ரத்வத்தை

தகவலின் அடிப்படையிலேயே இச் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதற்றடவையாக சென்ற மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை இச் சோதனை இடம்பெற்றது. கோட்டை நீதிமன்ற நீதிபதியிடம் பெற்றுக்கொண்ட அனுமதியுடன், ரத்வத்தையின் மனைவி ரமணி ரத்வத்தைக்கு தகவல் தெரிவித்த பின்னர், இரகசியப் பொலீஸார் இத்தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

வங்கி நடைமுறைச் சட்டத்தின் 77ஆவது பிரிவுக்கமையவே நீதிமன்றத்தின் இவ்வுத்தரவு பெறப்பட்டது. வங்கிச் சட்ட விதிகளின்படி, சாதாரணமாக வங்கியொன்றில் இடப்பட்டுள்ள வைப்புக்கள் மற்றும் பாதுகாப்புக்கென வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்துவது பாரதூரமான குற்றமாகும். ஏதாவது சந்தர்ப்பமொன்றில் வங்கி அவ்வாறு செய்யுமாயின், அதற்கெதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொண்டு நஷ்டஈடு பெற்றுக்கொள்ளமுடியும். ஆயினும், நாட்டின் தேசிய நன்மை கருதியும், பொதுமக்களின் நன்மை கருதியும் நீதிமன்ற உத்தரவு பெற்றுக்கொண்ட பின்னர் இவ்வகையான நடவடிக்கை மேற்கொள்ள வங்கிச் சட்டவிதி 77ஆம் பிரிவில் இடமளிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பெட்டகமொன்றை வாடகைக்கு விடுதல் வங்கிச் சேவைகளில் ஒன்றாகும். தமது பணத்தையோ, பெறுமதிமிக்க ஆவணங்களையோ அல்லது பொருள்களையோ பாதுகாத்து வைக்கும் பொருட்டு வாடிக்கையாளரொருவர் பணம் செலுத்தி பெட்டகமொன்றினை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளமுடியும். தமக்குத் தேவைப்படும் காலமுடிவில் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்திருந்த பொருள்களை எடுத்துக்கொண்டு, பெட்டகத்தை வங்கியிடம் கையளிக்க முடியும். பாதுகாப்பு பெட்டகத்தை வாடகைக்குப் பெற்றிருந்த காலத்தில் நபரொருவர் அதில் பாதுகாத்து வைக்கும் பொருள்கள் பற்றிய விவரங்களை வங்கி அதிகாரிகள்கூட அறிய முடியாது. தாம் விரும்பிய எப்பொருள்களையும் பொதி செய்தோ, அன்றி வேறு விதமாகவோ அப்பாதுகாப்புப் பெட்டகத்துள் வைத்திருக்கமுடியும். பெரும்பாலும் கோடீஸ்வரர்களான வியாபாரிகளுக்கே இச்சேவை பிரயோசனமுடையதாகும்.

இந்தவகையில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அருனுத்த ரத்வத்தை, அவரது மனைவியான ரமணி ரத்வத்தை ஆகியோரின் பெயரில் கொழும்பு கொள்ளுப்பிட்டி ஹற்றன் நஷனல் வங்கிக்கிளையிடமிருந்து வாடகைக்குப் பெறப்பட்டிருந்த பாதுகாப்புப் பெட்டகமே இரகசியப் பொலீஸாரினால் அண்மையில் சோதனையிடப்பட்டது.

முதற்றடவையாக கடந்த மாதம் 28ஆம் திகதி மூன்று பாதுகாப்புப் பெட்டகங்கள் இரகசியப் பொலீஸாரால் திறக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டன. அவற்றுள் ஐந்து கோடி ரூபாய் பெறுமதியான சேமிப்புப் பத்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட சமயம் அங்கு சமுகமளித்திருந்த அனுருத்த ரத்வத்தை இச்செலுக்கு ஆட்சேபம் தெரிவித்தார். இதனால் அன்று தமது சோதனை நடவடிக்கையை இரகசியப் பொலீஸார் இடைநடுவில் கைவிட நேர்ந்தது.

ஆயினும், அடுத்தநாள், ஓகஸ்ட் 29ஆம் திகதி கோட்டை நீதிவானும் மாவட்ட மேலதிக நீதிபதியுமான பிரியந்த பெர்னாண்டோவைச் சந்தித்து ஒன்றரை மணிநேரமாகத் தமது தரப்பு விடயங்களை முன்வைத்த இரகசியப் பொலீஸார் மேலும் சில பாதுகாப்புப் பெட்டகங்களைச் சோதனையிடுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டனர். அதன் பிரகாரம் தாம் மேற்கொண்ட சோதனைகளின் போதும் மேலும் ஒரு கோடி 16 லட்ச ரூபாய் பெறுமதியுடைய சேமிப்புப் பத்திரங்களை இரகசியப் பொலீஸார் கைப்பற்றினர். மேலும் சில வங்கிகளில் இவை போன்ற மேலும் சில பாதுகாப்புப் பெட்டகங்கள் இவர்களது பெயரில் இருப்பதாகப் தங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் இரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இரகசியப் பொலீஸார் அனுருத்த ரத்வத்தை, அவரது மனைவி ஆகியோரின் முன்னணியிலேயே இப்பாதுகாப்புப் பெட்டகங்களைச் சோதனையிட்டனர். அப்பெட்டகங்களில் இருந்த தமது தனிப்பட்ட கோவைகள் என அவர்கள் குறிப்பிட்ட கோவைகள் இரகசியப் பொலீஸாரினால் அவர்களிடம் கையளிக்கப்பட்டன. அதேபோன்று சேமிப்பு சான்றிதழ்களும் அவர்களது முன்னிலையிலேயே பரீட்சிக்கப்பட்டன.

அனுருத்த ரத்வத்தை இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இப்பணம் யாவும் சட்டப்படி சேர்க்கப்பட்டவை எனவும், நீதிமன்றத்தில் அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து தான் அதனை நிரூபிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது வெளிவந்துள்ள விவரங்களின்படி, இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட சேமிப்புச் சான்றிதழ்களின் பெறுமதி 6 கோடி ரூபாவுக்கு அதிகமாகும். இது ஒரு வங்கிக்கிளையில் உள்ள சில பாதுகாப்புப் பெட்டகங்களில் மட்டும் வைப்பில் இடப்பட்டிருந்த தொகையாகும்.

இங்கு இரு வினாக்கள் எழுகின்றன. வேறு வங்கிகளில் இதுபோன்ற வைப்புக்கள் எவ்வளவு தொகைக்கு உள்ளது என்பது முதலாவது வினாவாகும். இப்பணம் சட்டபூர்வமான முறையில் தேடப்பட்ட சொத்துக்களா? அல்லது மோசடி வியாபாரம் அல்லது நடவடிக்கைகள்மூலம் தேடப்பட்டனவா? என்பது இரண்டாவதும் மிகமுக்கியமானதுமான வினாவாகும்.

முன்னாள் அமைச்சரொருவர் ஒரு கோடி 50 லட்சம் ரூபா செலவில் வீடொன்றைக் கட்டியதாக வந்த ஒரு செய்தி, கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் பிரசார மேடைகளில் விவாதத்துக்குள்ளானது. தற்போது வெளிவந்திருப்பது அதைப்போன்றே பெருந்தொகைப் பணம் சேமித்து வைக்கப்பட்டிருந்த பிரச்சினையாகும்.

அனுருத்த ரத்வத்தை தோட்டங்களுக்குச் சொந்தக்காரர்களான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பெரும் பணக்காரக் குடும்பத்துப் பின்னணி கொண்டவர் என ஏற்றுக்கொள்ள முடியும். இருப்பினும் கடந்த காலங்களில் அவரது சொத்துக்களின் பெரும் பகுதியை அவர் அழித்துவிட்டார் எனக் கூறப்படுகிறது. ஆனால், அரசியலில் ஈடுபட ஆரம்பித்தபோதோ அமைச்சராகக் கடமை புரிந்தபோதோ அவர் இவ்வளவுக்கு பெரும் தனவந்தராக இருந்ததாகத் தெரியவில்லை. மறுபுறத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக கடமையாற்றிப் பெற்ற சம்பளத்தில் இவ்வாறான பெருந்தொகைப் பணத்தினைச் சேமிக்க இயலுமா? என ஒரு சாதாரண மனிதருக்கு சந்தேகம் எழ வாய்ப்புண்டு.

பிறிதொரு வகையில், அமைச்சர் என்ற வகையிலும், பிரதி அமைச்சர் என்ற வகையிலும் அவரிடம் இரு அமைச்சுக்களின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. முதலாவது மின்சார, எரிபொருள் துறை அமைச்சு ஆகும். இலங்கை மின்சார சபைக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் செய்யப்படும் கொள்வனவுகளும், பெறப்படும் ஒப்பந்தங்களும் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன. மின் விநியோகம் சீரற்று இருந்தவேளையில் மின்சாரத்தை வழங்க 'பியட்' போன்ற பாரிய மின் உற்பத்தி இயந்திரக் கொள்வனவுகள் இந்த அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட்டன. அவை தொடர்பான சில கொடுக்கல் வாங்கல்கள் அவ்வேளையில் ஊடகத்துறையின் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தன.

பாதுகாப்பு அமைச்சு பெருமளவிலான திமர்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் துறையாகும். ஒரு சில கொள்வனவுகள் சம்பந்தமாகக் கேள்விப் பத்திரங்கள் கோரும் நடவடிக்கைகள் உரியவகையில் கடைப்பிடிக்கப்படவில்லை.

## ஆயுதபேரத்தில் கிடைத்த மோசடிச் சொத்தா அது?

**தமிழில்: வீ.லியபஸ்ரீ**

இதற்குக் காரணம் நாட்டின் பாதுகாப்பின் அவசியம் முன்னிலைப்படுத்தப்பட்டமையாகும். அதுமட்டுமன்றி பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடமுடியாத விடயங்கள் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தனியாக நிதி வழங்கப்பட்டிருந்தது.

யுத்தம் மேற்கொள்ளுவதாகக் கூறிக்கொண்டு ஒரு குழுவினர் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகப் பொதுமக்கள் தம்மிடையே விமர்சித்துக்கொள்வதற்கு இவை வழிவகுத்தன.

இக்காரணங்களால் மட்டும் ரத்வத்தையிடம் உள்ள பெருந்தொகைப் பணம் முறையற்ற வகையில் சேர்க்கப்பட்டதென உறுதி செய்யமுடியாது. பணத்தைத் தேடிக்கொண்ட வழிமுறைகளைத் தெளிவுபடுத்தவேண்டியது அவரது கடமையாகிறது. அவர் வகித்த பதவியின் முக்கியத்துவத்தினால் இதனை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு அவர்மீது சுமத்தப்பட்டுள்ளது.

எல்லா அமைச்சர்களும் தமது சொத்துக்கள் பற்றிய விவரங்களை வெளியிடவேண்டியது சட்டப்படி அவசியமானதாகும். அமைச்சர்கள் தமது வசமுள்ள சொத்துக்கள் பற்றி வருடாவருடம் ஜனாதிபதிக்கு அல்லது வருமானவரித் திணைக்களத்திடம் பிரகடனப்படுத்தல் வேண்டும். இதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திடம் தமது பிரகடனத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுருத்த ரத்வத்தை வருடாவருடம் இவ்வாறு தன் சொத்து விவரங்களைப் பிரகடனப்படுத்தியிருப்பின், இப்போது இப்பிரச்சினையிலிருந்து ஓரளவுக்கு விடுபட்டிருக்கக் கூடும். அவர் தனது சொத்துக்களை எவ்வாறு சேர்த்தார் என்பது அடுத்த பிரச்சினையாகும். அவற்றை இந்நாட்டு மக்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். இதற்கு விளக்கமளிக்கும் பொறுப்பையும் ரத்வத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்தவகையான பெருந்தொகைப் பணத்தைத் தேடிக் கொள்ளும்போது அதற்குச் செலுத்தவேண்டிய வருமானவரியும் வேறு வகையான வரிகளும் ஒழுங்காகச் செலுத்தப்பட்டுள்ளனவா? என்பது அடுத்துள்ள பிரச்சினையாகும். இவ்விவரங்களும் நடத்தப்படவுள்ள விசாரணைகளால் வெளிக்கொணரப்படுவது அவசியமாகும்.

அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றிய பேச்சுக்கள் நாளாவட்டத்தில் அற்றுப்போவது நமது நாட்டில் சாதாரணமாக நடைபெறும் சம்பவங்களாகும். அரசியற் பிரபல்யம் காரணமாகவோ அன்றேல் அரசியற்பலம் காரணமாகவே இவ்வாறு நிகழ்கிறது. அண்மையில் இடம்பெற்ற விசாரணைகள் சிலவற்றுக்கும் இம்முடிவே ஏற்பட்டன. அந்தவகையில் இவ்விடயத்திலும் மீண்டும் ஒரு தடவை இவ்வாறு நிகழாதிருப்பதற்கு பொதுமக்கள் உரத்துக் குரலெழுப்ப வேண்டியது மிக அவசியமாகும். ★

### அனுருத்த ரத்வத்தை தம்பதியினரின்

## வைப்புச் சான்றிதழ் விசாரணைகள் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம்!

கொழும்பு,செப்.7

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் - தனியார் வங்கியில் உள்ள வைப்புப் பெட்டகங்களில் இருந்த நாலரைக்கோடி ரூபா பெறுமதியான வைப்புச் சான்றிதழ்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இரகசியப் பொலீஸாரால் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விசாரணையை லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்குமாறு இரகசியப் பொலீஸார் கோட்டை நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அனுருத்த ரத்வத்தையின் சொத்து விவரம் தொடர்பாகவும், வைப்புச் சான்றிதழ்கள் எவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டன என்பது குறித்தும் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விரைவில் விசாரணைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

இது தொடர்பாக அனுருத்த ரத்வத்தையிடமும் அவரது மனைவி ரமணியிடமும் விசாரணைகளை மேற்கொள்ளவிருப்பதாக லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் சந்தோஷ்சிவன் (Santosh Sivan) இயக்கிய 'ரெறறிஸ்ற்' (Terrorist) என்ற தமிழ்த் திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண (எ)

# ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு,செப்.7

தோட்டத் தொழிலாளர்களின் புதிய சம்பளத்திட்டம் தொடர்பான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் இராஜகிரியவிலுள்ள தோட்ட உரிமையாளர்கள் சங்கச் செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது

தொழிற்சங்கங்கள் சார்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், ராஜா செனவிரட்ண, மலியகொட ஆகியோரும் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் மூவரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின்கீழ் தோட்டத் தொழிலாளர் ஒருவரின் நாள் சம்பளம் 147 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எங்கள் உள்ளங்களை விட்டகலா ஈராண்டு நினைவலைகள்

தோற்றம்
12
✦
06
✦
1903



மறைவு
29
✦
08
✦
2000

### திருமதி இராசம்மா பொன்னப்பா

பூர்வபட்சத் திதி: அமாவாசை
07.09.2002 (சனிக்கிழமை)

*அமரத்திலகி இராசம்மா அவர்கள்*
*உயர் என்னும் பண்பில் தோன்றி...*
*உளமார எம்மைக் காத்து...*
*வளமாக வாழவைத்து...*
*வானகம் சென்றுவிட்டீர்.*
*எங்கள் அன்புத் தெய்வமே - அம்மா!*
*உங்களை நினையாத நாளில்லை*
*துதிக்கின்றோம் உனதாத்மா சாந்திபெறுக.*

உங்கள் நினைவுகளில் என்றென்றும் வாடும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.** (7990)

*இல.04, செட்டித்தெரு,*
*நல்லூர்.*

## மரண அறிவித்தல்கள்

### குஞ்சர் சின்னத்தம்பி

(ரதி சலூன் உரிமையாளர், சாவகச்சேரி)

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த குஞ்சர் சின்னத்தம்பி சனிக்கிழமை (31.08.2002) அன்று அகால மரணமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ரதி, ரவீந்திரன் (லண்டன்), ராகினி, ராதிகா(கொழும்பு), ரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்துரை, சிவானந்தம் (லண்டன்), பெர்னாண்டோ (கொழும்பு), விசயலோகன், சறோயினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2002) சனிக்கிழமை பி.ப.4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லாரை வடக்கு,*
*கொடிகாமம்.* (7957)

தகவல்:
மகேஸ்வரி (மனைவி)

### இராமலிங்கம் தில்லையம்பலம்

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர் A.I.)

அல்வாய், ஓடையைச் சேர்ந்த இராமலிங்கம் தில்லையம்பலம் அவர்கள் 03.09.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கௌரிதேவியின் அன்புக் கணவரும் முரளிதரன் (கனடா), வித்தியாதரன் (கனடா), கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுஜாதாவின் (கனடா) அன்பு மாமனாரும் கௌசித், வாஜியா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பறுபதம பரமகுரு ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.09.2002) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கௌரிதேவி
தில்லையம்பலம்
குடும்பத்தினரும்.

*சுந்தர்வளவு (ஓடை),*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.* (C/23701)


# Jaffna College Institute of Technology

**Vaddukoddai, Sri Lanka.**

**Students are welcome to register for the following courses commencing From 9th September 2002**

**Technician Diploma courses (NDT Level)**

- Electronic & Telecommunication Engineering
- Mechanical Engineering — *Duration 3 Years (Full Time)*
- Civil Engineering — *Duration 2 Years (Full Time)*

**Diploma Courses**

- Advanced Diploma in Computing
- Diploma in Computer Programming & Data Processing
- Diploma in Draughtsmanship (civil) — *Duration 1 Year (Full Time)*

**Technician Certificate Courses**

- Basic Engineering
- Electronics — *Duration 1 Year (Full Time)*

**Certificate Courses in Business & Scientific Applications**

- Ms Word
- Ms Excel
- Ms Access
- d Base III+
- Pascal
- C/C++
- Fox Pro
- JAVA
- Visual Basic 6.0
- Ms Power Point
- Computer Hardware
- Photo Shop
- Corel draw
- Page Maker

*Duration 3 -4 Months (Day and Evening Classes)*

**Craft Courses (தமிழ்மொழிமூலம்)**

- Electrical Wiring & Installation Practice (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Automobile Technology (மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்)
- Radio & T.V. Servicing (றேடியோ ரீவி பழுதுபார்த்தல்)
- Air-Condition & Refrigeration (குளிரூட்டுதலும் காற்று பதனிடுதலும்)
- Mechanical Craftsman Practice (லேத், வெல்டிங், பிற்றிங் பயிற்சி) — *Duration 1 Year (காலம் 1 வருடம்)*
- Foundry Practice (வார்ப்புப் பயிற்சி) — *Duration 6 Moths (காலம் 6 மாதங்கள்)*

**Our Diplomas Guide the Students to the Examinations of the following bodies**

- CITY & GUILDS OF LONDON INSTITUTE
- ENGINEERING COUNCIL OF LONDON
- AUSTRALIAN COMPUTER SOCIETY (ACS)
- BRITISH COMPUTER SOCIETY (BCS)

We are
Member of Association of Computer training organisations of Sri Lanka & Educational affiliate of British Computer Society.

☆ **Facilities:** *Library *Hostel *Sports

*Application forms are available at*

- ***JCIT, Vaddukoddai***
- ***Undergraduate Department, Jaffna College (Hospital Road, Jaffna)***

**TECHNICAL COMPETENCE IS THE KEY TO ECONOMIC SELF RELIANCE**

**DIRECTOR**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

*Tel No.: 070-213139* (C/23689) *E-mail: jcit@sltnet.lk*

# தென்மராட்சி அபிவிருத்திக்கென 31 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,செப்.7

தென்மராட்சி பிரதேச அபிவிருத்திக்கென இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 31 லட்சத்து 46 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

சமூக வள அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் கல்வி, ஆலயங்களின் புனருத்தாரணம் ஆகிய திட்டங்களின் கீழ் பாடசாலைகள், பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வீதிகள், ஆலயங்கள் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கென இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், வரணி சைவப்பிரகாச வித்தியாலயம், குடமியன் அ.த.க. பாடசாலை, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலம், மட்டுவில் அ.மி.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றின் கட்டட திருத்த வேலைகளுக்கும் புனரமைப்பு வேலைகளுக்கென 17 லட்சம் ரூபாவும் -

சரசாலை, நுணாவில் பிள்ளையார் ஆலயம், கைதடி மத்தி மூர்த்தியாவத்தை கந்தசாமி கோயில், மறவன்புலோ வள்ளி அம்மன் கோயில் ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்கு இரண்டு லட்சம் ரூபாவும் -

உசன் விடத்தற்பளை வீதி, கைதடி மத்தி பிரதான வீதி, மறவன் புலோப் பகுதியில் உள்ள மதகுகள், பாதைகள் திருத்துவதற்கென ஆறு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

சமூகவள அபிவிருத்தித் திட்டத்திற்கென சாவகச்சேரி பிரதேச சபைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு 3 லட்சம் ரூபாவும் -

மட்டுவில் தெற்கு பாலர் பாடசாலை, மட்டுவில் வளர்மதி பாலர் பாடசாலை, மிருசுவில் பாலர் பாடசாலை ஆகியவற்றுக்குத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கும், கைதடி செல்வா சனசமூக நிலையம், கைதடி உதயசூரியன் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்குப் புத்தகங்கள், தளபாடங்கள் கொளவனவு செய்வதற்கும் -

வரணி, மாசேரி கிராமிய அபிவிருத்திச் சங்கக் கட்டடம் புனரமைப்பதற்கும், வரணி மத்திய சனசமூக நிலையத்திற்கு குழாய்க்கிணறு அமைக்கவும், புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்து வழங்குமாறு அந்தந்த திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-117)

### மட்டுவில் வடக்கில்

## கண்ணிகளை அகற்றும் பணியில் படையினர்

மட்டுவில் வடக்குப் பகுதியிலுள்ள வீட்டு வளவுகள் மற்றும் வெறும் காணிகளில் புதைக்கப்பட்டிருக்கும் வெடிகுண்டுகள், கண்ணிகள், மிதிவெடிகளைச் செயலிழக்கச் செய்யும் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானப் பகுதி, மட்டுவில் பளையடிப் பிள்ளையார் கோயில் பகுதிகளில் புதைந்து காணப்பட்ட மூன்று ஷெல்கள் படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

மேற்படி ஷெல்களை செயலிழக்கச் செய்தபோது ஏற்பட்ட சத்தம் இரண்டு மைல்களுக்கு அப்பால் கேட்டதாகக் கூறப்பட்டது. (எ-31)

## ஆயித்தியமலை ஆலய தொலைபேசி துண்டிப்பு!

கொக்கட்டிச்சோலை,செப்.7

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஆயித்தியமலையில் உள்ள வியாகுலமாதா ஆலயத்துக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்பை உடனடியாக நிறுத்துமாறு மட்டக்களப்பு இராணுவக் கட்டளையிடும் அதிகாரி உத்தரவிட்டிருக்கிறார். கடந்த மாதம் 31ஆம் திகதி இந்த இணைப்பு வழங்கப்பட்டது.

பாதுகாப்புப் படையின் அனுமதியின்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படக்கூடாது என்று படையினர் மட்டக்களப்பு தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அறிவித்துள்ளனர். இதனால், படுவான்கரைப் பகுதியில் உள்ள மக்களுக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

## ஹக்கீம் நாடு திரும்பினார்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்த லண்டன் சென்றிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு திரும்பினார்.

'பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் திருப்தியானதாகவும் முன்னேற்றகரமானதாகவும் அமைந்தன' என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடத்துக்கு அவர் விளக்கம் அளிப்பார். (ஜ-3)

# படைத்தரப்பு விளக்கம்

**சமாதான சூழ்நிலை தொடர்பாக படையினரின் நிலைப்பாட்டை விளக்கி யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கை இங்கு பிரசுரமாகின்றது.**

சுமார் இரண்டு தசாப்தங்களாக இலங்கையின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக கலாசாரத்தை சீர்குலைச் செய்யும் வகையில் இடம்பெற்ற கொடூரமான யுத்தத்திற்கு முடிவு காண அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாக யுத்தம் நிறுத்தப்பட்டது.

இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பிறகு கடந்த சில மாதங்களாக யுத்த அச்சம் இல்லாமல், அமைதியான சூழ்நிலை நாட்டில் உருவாகி வருவதுடன், மக்களின் அன்றாட வாழ்க்கைத்தரமும் மேலுயர்ந்துள்ளது.

இன்னும் சில தினங்களில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்களின் முதற்கட்டம் தாய்லாந்தில் நடைபெறவிருக்கின்றது. நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்கு இரு தரப்பும் கொண்டுள்ள, அக்கறையையும் ஆர்வத்தையும் சர்வதேச சமூகம் வரவேற்று, பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன் இந்தச் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

தற்போது காணப்படும் சமாதான சூழ்நிலையை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் பாதுகாப்பு படையினர் மிக விழிப்புடன் செயற்படுகின்றார்கள். குறிப்பாக அனைவரையும் துன்பப்படுத்தி இன்னலுக்குள்ளாக்கும் இந்தக் கொடிய யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்து, அமைதியை ஏற்படுத்த பாதுகாப்பு படையினர் மிக அர்ப்பணிப்புடனும், அவதானத்துடனும் செயற்படுகின்றார்கள்.

ஆனால், கடந்த 2ஆம் திகதி 524ஆவது படையணித் தலைமையகத்தை முற்றுகையிட்ட பாடசாலை மாணவர்களும், பிரதேச மக்களும் போராட்டத்தை நடத்துவதற்கு உடந்தையாக இருந்தவர்களும், முகாமிற்குள் பலவந்தமாக ஊடுருவி முகாமில் இருந்த உடைமைகளை சேதப்படுத்தியது மட்டுமல்லாது அங்கிருந்த பொருள்களையும் தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர்.

படையினரை ஆத்திரமூட்டி உயிர்ச்சேதங்களை ஏற்படுத்த முயற்சித்தவர்களின் செயல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தின் நுண்ணறிவுடன் செயற்பாட்டமையினாலேயே அங்கு இடம்பெறவிருந்த உயிர்ச் சேதங்கள் முற்றாகத் தவிர்க்கப்பட்டன என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம். ஆனால், தற்போது இராணுவத்தின்மீது வீண்பழி சுமத்தப்படுகின்றது.

அன்பார்ந்த யாழ். மக்களே! நுண்ணறிவுள்ள இளைஞர், யுவதிகளே!! மாணவ, மாணவிகளே!!! தமிழ் இனத்திற்கு எதிராகவோ, தமிழ் மக்களுக்கு எதிராகவோ இராணுவம் ஒருபோது யுத்தம் செய்யவில்லை. இராணுவத்தினர் சகல இலங்கை மக்களினதும் பாதுகாப்பு, இறைமை, உரிமைகளை பாதுகாப்பதற்கும், இலங்கையைப் பாதுகாப்பதற்குமே கடமைப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

மேலும், வெளியில் இருந்து நாட்டின்மீதும் நாட்டு மக்கள்மீதும் எதிரிகள் மேற்கொள்ளும் தாக்குதலில் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்காக இராணுவம் உள்ளதேயன்றி, நாட்டினுள் குறிப்பிட்ட பகுதிகளைக் கைப்பற்றுவதற்காகப் போராடுபவர்கள் இராணுவத்தினர் அல்லர் என்பதை விருப்பத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யுத்தநிறுத்தம் செய்யப்பட்டுப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கமைய யாழ். - கண்டி ஏ-9 வீதி திறக்கப்பட்டு, வடக்கிற்கும் தெற்கிற்குமான தரைவழிப்பாதையில் பயணம் செய்யக் கூடிய சூழ்நிலை உருவாகியதன் காரணமாக அன்று நீங்கள் அனுபவித்த பல்வேறான கஷ்டங்கள் குறைந்துள்ளமையை நீங்கள் அறிவீர்கள்.

தற்போதுள்ள அமைதியான சூழ்நிலை காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு உதவியுடன் வடக்கு - கிழக்குப் பகுதியில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அன்று இடம்பெயர்ந்த மக்கள் தற்போது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளனர். மிதிவெடிகளினால் ஏற்படும் உயிர்ச்சேதத்தைத் தடுப்பதற்காக சில பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த லட்சக்கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த பல பாடசாலைகள் தற்போது திறக்கப்பட்டு, மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான உணவு, மருந்துப்பொருள்கள் உட்பட சகல அத்தியாவசியப் பொருள்களும் குறைவின்றி தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ள சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளமையினால் கடந்த காலங்களில் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து வந்த நீங்கள் தேவைக்கேற்ப பொருள்களை கொள்வனவு செய்யவும், நாட்டில் தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலை காரணமாக நாட்டில் எந்தவொரு பகுதிக்கும் பயணம் செய்யவும் வசதிகள் கிடைத்துள்ளன.

ஆனால், சமாதானத்திற்கு எதிராக செயற்படும் நபர்களின் நோக்கமானது நாட்டில் அமைதியை உருவாக்குவது அல்ல. அன்று நீங்கள் அனுபவித்த கஷ்டங்களுக்கு மேல், இன்னும் பல விதமான கஷ்டங்களை அனுபவிக்கச் செய்து, பிறந்த நாட்டிலேயே உங்களை அகதிகளாக்க சமாதானத்திற்கு எதிராக செயற்படும் நபர்கள் திட்டமிட்டு செயற்படுகின்றார்கள். இந்நாட்டில் சமாதானம் நிரந்தரமானால் அவர்களுக்கு இடமில்லாமல் போய்விடும். இதனால்தான் தற்காலிகமாக நிலவும் அமைதி சூழ்நிலையைச் சீர்குலைப்பதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முயற்சிக்கின்றார்கள் - என்றுள்ளது.

(ம)


# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(பூங்காவனத் திருவிழா)



## சீர்வனம் சிறக்க வரமருள்வாய்!

கலை சிறந்த புகழ் பூத்த நல்லூரிலே
கவின் சிறந்த நல்லையம்பதி அமர்ந்த
நிலை சிறந்த அழகனே அநாதியாக
நீயிருந்த இம் மண்ணில்
பொங்கு மணி அலங்காரக் கோயில் கொண்ட
குமரனே உமைமைந்தனே - புவனமெல்லாம்
சாங்கத் தமிழ் செழிக்க இன்பம் நிறைய
மங்களச் சீர்வனம் சிறக்க வரமருள்வாய்

கோ.ரகுவரசர்மா ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## தலைநிமிர்ந்து வாழவைப்பாய்!

நல்லை நகர் நாயகனே
நான்வணங்கும் நாயகனே
நாளும் வினை போக்கிடுவாய்
நல்வாழ்வு தந்திடுவாய்
தமிழ் மண்ணின் காவலனே
தரணியை ஆழ்பவனே
தடை நீக்கி எம் இனத்தை
தலை நிமிர்ந்து வாழவைப்பாய்.

ஞான.செந்தூரன்
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி

## ஈழநல்லைப் பெருமானே

சொல்லிடும் சொல்லில் நல்ல தெய்வம்
நல்லைக் கந்தன் தருவார் வேண்டினருள்
வேலெடுத்தெறிந்திடும் குமரகுருபரன்.
மாலவன் மருகனவன் புழ்பாடுமனமே.

நேசம் கொண்ட அடியவர் இடர்நீக்கி
ஈசன் பிரணவ பொருளை உணரவைத்த பெருமானே
கேசமாறுகொண்டு வீறுகொண்டு சூரவதம் புரிந்தவரே
பாசம் நீக்கி பேசும் மொழி ஈந்த ஈழநல்லைப் பெருமானே.

தென்புலோலியூர் கவிஞர் ந.சங்கரலிங்கம்

## அருள் புரிவாய் நல்லைக் கந்தா!

மலர்ந்த சமாதான புது யுகத்தில்
மக்கள் மனங்கள் மகிழ்வுடன் திகழ
நல்லை மா நகரிலே வீற்றிருக்கும்
நல்லையம் பதிவாழ் கந்தனே
நாற்றிசை எங்கும் உள்ள
பக்தர்கள் உன்அடி தொழ
அடியவர்கள் குறைதீர்த்து
அன்புடனே அருள்புரிவாய்

க.புஸ்பாஞ்சலி - புங்குடுதீவு - 4

## சரணம் சரணம் கந்தா

நல்லையம்பதியின் நாயகனாம் வேலவனே
தில்லைக் கூத்தனின் சிந்தைக் கினியவனே
வல்வினைகள் களைந்து நல்வரங்கள் அருள்பவனே
பல்லுயிர்கள் நாங்கள் சரணம் சரணம் கந்தா

பன்னிரு விழியழகால் பாவங்களைப் போக்கிவிடு
உன்வீர வேல்அழகால் நேர்வழியைக் காட்டிவிடு
அஞ்சேல் என்று உன் அருட்கரத்தால் அபயமளித்துவிடு
தஞ்சம் என்றும் உன் பாதம் சரணம் சரணம் கந்தா

வெம்பகை உன் வேல்கண்டு ஓடி மறையட்டும்
இனமத பேதங்கள் இல்லாது ஒழியட்டும்
அன்பினால் ஒன்றுபட்டு ஒற்றுமை யுகம் மலரட்டும்
கையேந்தி நிற்கின்றோம் சரணம் சரணம் கந்தா!

நவாலியூர் மா.மீனலோஜினி

## சமர் சாய சம்மதம் சொல்!

சுடு தேச நிலை நீங்கி
சுகம் தேடும் மாற்றம்
சுடு நெஞ்சப் போக்காளர்
கனம் நீங்கித் தேற்றம்
படு வேகச் சமர் நீங்கி
பகர்கின்ற ஏற்றம்
கொடு நீடு சமர் சாய்த்து
கொடும் பகைமை நீக்கம்.

- மானியூர் ரட்ணேஸ்

வீரவணக்கம் வீரவணக்கம் வீரவணக்கம்

# வீரவணக்கம்


25-08-2002 அன்று
சுகவீனம் காரணமாகச் சாவடைந்த
கேணல் கிட்டு
பீரங்கிப் படையணி சிறப்புத்தளபதி

## கேணல் ராஜு

அவர்களுக்கு எங்கள்

## வீரவணக்கம்

இடிவிழுத்திப் போகும்
இச்செய்தி வருமென்றா
உன்னை வழியனுப்பி வைத்தோம்.
போர் ஓய்ந்த நாளிலும்
எமக்கேன் இடி விழுகிறது.
குருதி நரம்புகள் உறைந்து போக
நெஞ்சில் குத்தீட்டி ஏறுகிறது.
கேணல் ராஜு
குயிலனெனவும் இவன் குறிக்கப்பட்டான்.
அதிகம் பேசாமல்
அதிகம் சிரியாமல்
அதிக அதிசயம் நிகழ்த்திய அதிசயன்.
தலைவனருகில் தன்னைத் தயார் படுத்தியதால்
கதிரவன் ஒளிகசிந்து ஊறியகாளை.
நுட்பமதி நிறைந்த நூதனன்.
விடுதலையன்றி வேறொன்று சிந்தியா விவேகன்.
புதிய அரும்புகள் முளை கொள்ள
நாற்றங்கால் போட்ட நாயகன்.
பெருவெற்றிகள் ஒவ்வொன்றின் பின்னாலும்
இந்த புலி மகனின் பேராற்றலும் இருந்தது.
பகை நெஞ்சேறிய குண்டுகள் ஒவ்வொன்றையும்
இவன் கைகள் தொட்டு நீவின.
எல்லாவற்றையும் தூக்கி வைத்து விட்டு
இத்தனை அவசரமாய்
சாவு அள்ளிப் போனதைத் தாங்க முடியவில்லையே.
ராஜு
ஒரு களத்தில் நீ மடிந்திருக்கலாம்
நோய்தின்று போனதுதான் தாளமுடியவில்லை.
அண்ணனைக்கூட மீண்டு தரிசிக்காமல்
அகல்விளக்கே! அணைந்துவிட்டாயே.
நீ வளர்த்த பயிர்களைக் கொண்டே
நின் கனவை நனவாக்குவோம்.
சோகம் கப்பிய முகத்தைத் துடைத்து விட்டு
உன் கனவை நனவாக்குவோம்.
அது ஒன்றே உனக்குக் காணிக்கை.
என்றாலும் உன் பிரிவெனும் கொடுமை
நீண்ட நாளிருக்கும் எம் நெஞ்சில்!



# கேணல் ராஜு (குயிலன்)

## (அம்பலவாணர் நேமிநாதன்)

ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

*"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"*

அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ். மாவட்டம்.

(C/23720)

# இந்த வார இராசி பலன்

## 08.09.2002 – 14.09.2002

| | | | |
|---|---|---|---|
| | | சனி, ரா. | |
| | இராசிச் | | வியா. |
| | சக்கரம் | | செவ். சூரி. |
| | கே. | வெ. | சந். புத. |

மாற்றம்:

08.09.2002இல் உத்தரம் கன்னியில் சந்திரன் நிற்கும்.

10.09.2002இல் சிங்க ராசியில் புதன் மாறும்.

பேச்சுக்களில் முன்னேற்றம ஏற்படும். தெற்கில் அரசியல் வாதிகளும் சமயவாதி களும் ஒருவரை ஒருவர் குறைசொல் லுவார்கள். கருத்துச் செறிவில் கலகம் பிறந்து, நியாயம் பிறக் கும். இந்தியாவில் வடக்கு அர சியல்வாதிகள் தெற்கு அரசியல் வாதிகளுடன் மோதுவார்கள். திட்டமிட்ட அழிவுகளால் பலஸ் தீனத்தில் அமைதிகுலையும். ஈராக்கில் ஜனாதிபதிக்கு எதிரா கச் சதிகள் மேற்கொள்ளப் படும். மேற்கு நாடுகள் வறிய நாடுகளுக்கு பொருளாதார உதவிகளை வழங்கும். இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில காற்றின் அழுத்தம் இயற்கை அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட் டுகின்றன.

### மேடம்

எவரும் உயிரோடு இருந்தால்தான் எதையும் சாதிக்கலாம். இறந்த பின்பு ஒரு மாதம் அல்லது ஒரு வருஷம் சென்றதும் மெல்ல மெல்ல மறந்து விடுவார்கள் இந்த மனிதர்கள். மறக்க முடியாத கவலை, கனவு காணாத மனிதர்கள், நிழல் விழாத உருவங் கள் இவ்வுலகில் இருக்கமுடியாது. தொழில் நிலையில் புதிய திட்டம், வரவு குறைவு, இனஜன உதவிகள், நண்பர்கள் வரவு, இடமாற்றங்கள் என் பன ஏற்படும். உஷ்ணத்தால் தோல் தடித்தல், காய்ச்சல், வயிற்று வருத் தம், மலச்சிக்கல் என்பன வர இட முண்டு. வாகனத்துறை, வியாபாரத் துறை, சட்டத்துறை போன்ற துறை யினர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்*

### இடபம்

கழுதை கத்தினாலும் அழுக்குத் துணி துவைப்பவர்கள் எதிரே சென் றாலும் காரியங்கள் நிறைவேறும் என பது சாத்திர விதி. தொழில்ஸ்தானத் தில் பல அதிர்ஷ்டகர வழிமுறைக ளைக் கையாளுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள். மறைமுக எதிரிகளை மடக்கிவிடுவீர்கள். எதிர்ப்பாலாருடன் என்ன பிரச்சினை? அரச அதிகாரிகள உதவி, அரசியல்வாதிகளால் நற்பலன் கள் என்பன கிடைக்கும். சூட்டால் பீனிசம், சல வருத்தம், நாரிப்பிடிப்பு என்பன வரும். செய்தித்துறை, போக்கு வரத்துத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர்கள் அதிக நன் மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்*

### மிதுனம்

பொருளால் மட்டும் ஒருவரைத் திருப்திப்படுத்த முடியாது. ஆனால் பொருள் இல்லாமலும் இவ்வுலகில் வாழமுடியாது. இந்தப் பொருளுக்காக எத்தனை போட்டிகள்? சகோதரர் களுக்கு நன்மைகள் ஏற்படும். தொழில நிலையில் மாற்றங்கள் கொடுக்கும். தூரதேசத்துச் செய்திகள், பிரயாணங் கள் என்பனவரும். முதுகுவலி, சிறு காயங்கள், உஷ்ணபீடைகள், சளி, வாய்வு என்பன ஏற்படும். குருத்துறை, செய்தித்துறை, சந்தைத்துறையினர் போன்ற துறையினர்களுக்கு நன்மை கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

### கடகம்

யார் இவ்வுலகில் பெரியவன்? இறைவனைத் தவிர அவரவர் அறிவுக் குத் தகுந்த முறையில் கருத்துக்கள வெளியிடுவதும், செயற்படுவதும் சக ஜம்தான். தொழில்ஸ்தானத்தில் நல்ல முன்னேற்றம், சகோதரர்களுக்கு உத வுதல், அயலவர்கள் சந்தேகப்படுதல், வாக்குக் கலகம், இடமாற்றங்கள் என் பன ஏற்படும். தொண்டை உபாதை, திடீர் கோபம் வருதல் என்பன வரும அரசியல்துறை, கடல்துறை, நகைத் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் இலாபம் அடை வார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

### சிங்கம்

உங்கள் பிறந்த இலக்கினம் நேரத தைக் கொண்டு கணிக்கப்படுகின்றது. அந்த இலக்கினத்திலே அந்த நேரத் திலே ஆதிக்கம் உடைய கிரகத்தின எண்ணின்படியே பலன் கூடிக்குறை யும். பிறந்த திகதியில் பிறந்த நேரம மிக முக்கியமாகும். தொழில்ஸ்தானத் தில் திட்டமிட்ட புதிய நடைமுறை களை ஏற்படுத்துவீர்கள். மேலதிகாரி களுடன் நிதானமாக இருக்கவும். மறை முகத்தில் வீண்பழி சுமத்துவார்கள். பொருள் விஷயமாக புதிய யோசனை கள் வரும். சகோதர வழியினரின் உதவிகள் கிடைக்கும். தூரத்து உற வினர் உதவிடுரிவர். பிரசர், யோசனை, கைகால் உளைவு என்பன கொடுக் கும். பாதுகாப்புப் பகுதி, மருந்துப் பகுதி, மின்சாரப் பகுதி, குருத்துறை போன்றவர்கள் முன்னேற்றம் அடை வார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்*

### கன்னி

கலைக்கு, அழகிற்கு, அறிவுக்கு உரிய இராசியான கன்னியில் பிறந்த வர்களுக்கு இலக்கினமோ, இராசியோ அமைந்திருந்து குரு, வெள்ளி, புதன இருப்பது நல்ல யோகமாகும். தொடர்ந்து தொழில்ஸ்தானத்தில் நன் மைகள் அதிகரிக்கும். சகோதரங் களுக்குச் சிறப்புக்கள் வரும். குடும்பத தில் கருத்து வேற்றுமை வரும். இட மாற்றங்கள் ஏற்படும். புதிய செய்தி களால் கவலை ஏற்படும். வாய்வு, உஷ்ணபீடைகள், மூலம் - தொண்டை வருத்தங்கள் வரும். பொருள் கொடுத்து ஏமாற்றம் அடைய இடம் உண்டு. சந்தை வியாபாரம், தோட் டத்துறை, பிரயாணத்துறை தொடர் பானவர்களுக்கு நன்மைகள் அதிகம கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- புதன்.*

### துலாம்

உலகில் பிறந்த உயிர்கள் எல் லாம் கிரக பலத்திற்குக் கட்டுப்பட்டு உரிய காலத்தில் பலன்கள் அடை கின்றன. மனிதர்களை கிரகங்கள் விதி யிட்டு அசைத்து வருகின்றன. கிடைப் பதுதான் கிடைக்கும். ஆசைப்பட்ட தெல்லாம் எமக்கும் கிடைக்கும் என எண்ணமுடியாது. தொழில்ஸ்தானத் தில் சில பொறுப்புவிட்டு, புதிய சில பொறுப்புக்கள் வரச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். பொருள் இழப்புக்கள் ஏற்ப டும். எதிலும் இரகசியமாக இருக்க வும். தூரத்துச் செய்திகள் யோசனை கள் கொடுக்கும். அரச உதவிகள் கிடைக்கும். தோல் வருத்தம், வாத உளைவு, நாரி நோ, நரம்பு, ஈரல் வருத்தங்கள் வரும். நெருப்பு கவனம். பாதுகாப்புத்துறை, சட்டத்துறை, குருத துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன்.*

### விருச்சிகம்

சமாதானம் மலர எல்லோரும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்தே தீர வேண்டும். பேதங்கள், பிரச்சினைகள எல்லா இடங்களிலும் எந்த ரூபத்தி லும் உருமாறியபடி உலகமெல்லாம இருக்கும். தொழில்ஸ்தானத்தில் பல மாற்றங்களைக் காணுவீர்கள். மேலதிகாரிகளுடன் கருத்து வேற் றுமை வரும். பொருளில் கவனமாக இருக்கவும். சிலரின் நயவஞ்சகச் செயற்பாட்டால் பாதிக்கப்படுவீர்கள். சாப்பாட்டில் கவனமாக இருக்கவும் சிறுகாயங்கள், மூக்கு - தொண்டை நோ, இரத்த மாற்றம் என்பன ஏற்படும். வங்கித்துறை, சட்டத்துறை, மருந்துத துறை, எண்ணெய்த்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன் மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன்.*

### தனுசு

உங்கள் ஆயுளைக் கூட்டவேண்டு மாயின் தர்மத்தைச் செய்யவேண்டும். அதேபோன்று ஆயுளைக் குறைக்க வேண்டுமாயின் அதர்மத்தைச் செய்து வரவேண்டும். இதில் எதைச் செய்ய விரும்புவீர்கள்? தொழில்ஸ்தானத்தில ஏற்படும் சோதனைகளைத் தாங்கிக் கொள்வதனால் தர்மநிலை தளம்பாது இருக்க இடமுண்டு. எதிர்ப்பாலார் குறை கூறுவார்கள். பொருள்சேதம் இழப்பு வரலாம். புதிய செய்திகளால மனக்கலக்கம் ஏற்பட இடமுண்டு. கரல்வருத்தம், வயிற்று நோ என்பன வரும். செய்தித்துறை, குருத்துறை, வியாபாரம், சந்தைத்துறை, கமிஷன் வேலை போன்றவற்றில் தொடர்புடை யவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன்.*

### மகரம்

தெற்கு வாசல் வீட்டிற்கு கிணறு தென்மேற்கில் அமையவேண்டும். ஈசா னிய மூலையாகிய வடகிழக்கிலும் அமையலாம். வளமற்ற வீட்டில் இருந் தால் பொருள் மிஞ்சாது. நோய் நொடி களால் வேதனைதான் மிஞ்சும். தொழில்ஸ்தானத்தில் கருத்து வேற் றுமை வரும். அடிக்கடி யார் மீதும் சீறிச்சினந்து மற்றவர்களின் வெறுப்புக களைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைக்கலாம். கொடுத்த பொருளால கலகம் வரும். வீட்டில் அமைதியற்ற நிலை ஏற்படும். மூட்டுவலி, தலைவலி, கால்வருத்தம், கால் பிடிப்பு என்பன வர இடமுண்டு. கடல்துறை, பத்தி ரிகை, புத்தகத்துறை, மருந்துத்துறை, நகைத்துறை, குருத்துறை தொடர்பான வர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்:- திங்கள்*

### கும்பம்

மதுவும் மாமிசமும் உடம்பின் நரம் புகளையும் உணர்வுகளையும் பாதிக் கும். அதனால் தீவிர தெய்வ வழிபாட டுடையவர்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வது நன்று. தொழில்ஸ்தானத் தில் மந்தநிலை ஏற்படும். பொருள் செலவு அதிகமாகும். வீடு, வாகன விஷயமான யோசனை வரும். உறவு முறையினர் வேதனை தருவார்கள். பொருள் விரயமோ, களவோ போக லாம். இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்ப டலாம். கால்வருத்தம், சளித்தொல்லை, தோல்வருத்தம், உஷ்ணபீடைகள் என் பன வரும். சட்டத்துறை, மருந்துத் துறை, குருத்துறை போன்ற துறை களில் தொடர்பானவர்கள் நற்பலன் கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள்.*

### மீனம்

விரதங்களால் எமது உடல், மனம் சாந்திநிலை அடைகின்றது. ஆனால் இதைத் தாங்கமுடியாதவர்கள் பல ருக்கு அல்சர் வந்து கொண்டிருப்பத னால் கண்டபடி விரதங்களைப் பிடித்து வருவது தவிர்க்கப்படவேண் டும். அளவறிந்து செயற்படவேண் டும். தொழில்ஸ்தானத்தில் பொருள் வரவு ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். திடீர்ப் பிரயாணங்கள் ஏற்படும். சளி, உஷ்ணபீடைகள், காய்ச சல் வரும். கடல்துறை, குருத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்தில் நல்ல இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள்.*

மகாதேவா ஜோதிடம்

---

# வலி.மேற்குப் பிரதேசத்துக்கு 8 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.மேற்கு,செப்.7

வலிகாமம் மேற்குப் பிரதேசத் துக்கு இந்த ஆண்டுக்கான பன்முகப படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் 8 லட்சம் ரூபா நிதி அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அராலி வடக்கு சுடலைமடமும் வீதியும் திருத்தியமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும் -

சங்கானை யுட்பிற்ர் ஸ்ரார் விளை யாட்டுக் கழகத்துக்கு 75ஆயிரம் ரூபாவும் -

தொல்புரம் மத்தி சனசமூக நிலை யத்துக்கு தளபாடங்களும் புத்தகங் களும் கொள்வனவு செய்வதற்கு 25ஆயிரம் ரூபாவும்-

அராலி கிழக்கு பாலர் பாட சாலைக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவும் -

வட்டுக்கோட்டை மத்திய கல் லூரிக்கு றோனியோ இயந்திரமும் தளபாடமும் கொள்வனவு செய்வ தற்கு ஒரு லட்சம் ரூபாவும் -

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித் தியாசாலைக்குத் தளபாடங்களும் புத்தகங்களும் கொள்வனவு செய் வதற்கு 50 ஆயிரம் ரூபாவும் -

காட்டுப்புலம் தமிழ்க்கலவன் பாட சாலைக்கு அபிவிருத்தி வேலை களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

மூளாய் சைவப் பிரகாச வித்தி யாசாலைக்கு அபிவிருத்தி வேலை களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலய திருத்தவேலைகளுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

சுழிபுரம் விவேகானந்தா விளை யாட்டுக்கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபா வும் -

சங்கானை அரசினர் வைத்திய சாலைக்கு தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கு 30 ஆயிரம் ரூபாவும் -

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஜ-175)

# லாண்ட்மாஸ்ரர் தடம்புரண்டதில் சாரதி படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.7

பாரத்துடன் வந்த லாண்ட்மாஸ் டர் ஒன்று தடம்புரண்டதில், அதனை ஓட்டி வந்த சாரதி படுகாயமடைந்தார்.

உரும்பிராய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத் தில் மருதனார்மடத்தைச் சேர்ந்த புவனேந்திரம் புவிதாசன் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்த வராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த புதனன்று நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயி லடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் ஆரியகுளம் பலாலி வீதியைச் சேர்ந்த பி.சாந்த தீபன் (வயது 16) என்பவரே காய மடைந்தவராவார்.

இவரும் யாழ்.போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

(எ-15)

# சட்டவிரோதமாக விறகு தறிப்பவர்மீது நடவடிக்கை

தென்மராட்சி.செப்.7

சாவகச்சேரி நகரப் பகுதியில் மக்கள் மீளக்குடியமராத வீடுகளி லும், காணிகளிலும் அத்துமீறி விறகு தறிப்பவர்கள்மீது இந்தப் பகுதி கிராம அலுவலரும், பொதுமக்களும் நட வடிக்கை எடுத்துவருகின்றனர்.

அத்துமீறி விறகு தறிப்பவர்களின கோடரி, கத்தி ஆகியவை பறிமுதல் செய்வதுடன் கொண்டுசெல்லப்படும் விறகுகளும் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

(எ-117)

# புன்னாலைக்கட்டுவன் வடக்கில் பன்றிகளால் பயிர்கள் நாசம்!

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் கட்டாககாலி பன்றிகளால் விவசாயப் பயிர்கள் பலவும் அழிக்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் தற்போது விவசாயிகளினால் செய்கை பண்ணப் பட்டுள்ள கரட், பீட்றூட், மரவள்ளி போன்றவற்றைப் பன்றிகள் தமக்கு உணவாக்குவதுடன் பயிர்களையும் அழித்து துவம்சம் செய்துவிடுகின்றன.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக் கப்படாத பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் இரவில் காவல்புரிய முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளமையே இதற்குக் கார ணம் எனக் கூறப்பட்டது.

இதனால் பெரும் நஷ்டமும், கவ லையும் அடைந்துள்ள விவசாயிகள் இப்பகுதிகளில் விவசாயச் செய்கை யில் ஈடுபடுவதைப் படிப்படியாகக் கைவிட்டு வருகின்றனர்.

மேற்படி கட்டாக்காலி பன்றிகளின் தொல்லைகள் குறித்து விவசாயிகள கிராம அலுவலரிடமும் விவசாய சம் மேளன தலைவரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இப்பகுதி விவசாயிகள் கடந்த 8 வருடங்களின் பின்னர் தற்போது தமது சொந்த நிலங்களைப் பண்ப டுத்தி விவசாயச் செய்கையில் ஈடு பட்டு வருகின்றனர் என்பது குறிப்பி டத்தக்கது.

(எ-133)

# தென்மராட்சிக் கல்வி வலய சஞ்சிகைப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,செப்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலை மாணவர்களிடையே நடத்தப் பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட் டுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங் களைப் பெற்ற சஞ்சிகைகள் மாகாண மட்டப்போட்டிக்கு அனுப்பட்டுள்ள தாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

பிரிவுகளும், வெற்றிபெற்ற பாட சாலைகளின் பெயர் விபரம் வருமாறு:-

### பாலர் - கீழ்ப்பிரிவு

முதலாம் இடத்தை மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ம.வி. ஆகியனவும் 3ஆம் இடத்தை மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயமும் பெற் றுள்ளது.

### பாலர் - மேற்பிரிவு

முதலாம் இடம்: கைதடி முத்துக் குமாரசாமி ம.வி., 2ஆம் இடம்: மீசாலை வீரசிங்கம் ம.வி., 3ஆம் இடம்: மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

### இடைநிலைப் பிரிவு -I

முதலாம் இடம்: கைதடி முத்துக் குமாரசாமி ம.வி., 2ஆம் இடம்: மட் டுவில் தெற்கு அ.மி.த.க. பாட சாலை, 3ஆம் இடம்: மீசாலை வீர சிங்கம் ம.வி.

### இடைநிலைப் பிரிவு -II

முதலாம் இடம்: மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., 2ஆம் இடம்: சாவ கச்சேரி மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்: கைதடி முத்துக்குமாரசாமி ம.வித்தி.

### இடைநிலைப் பிரிவு -III

முதலாம் இடம்: மீசாலை வீரசிங் கம் ம.வி., 2ஆம் இடம்: மட்டுவில் சந்திரமௌலீச வித்தி., 3ஆம் இடம்: கைதடி விக்கினேஸ்வரா வித்தி.

### கல்லூரி நிலைப் போட்டி

முதலாம் இடம்: மீசாலை வீரசிங் கம் ம.வி., 2ஆம் இடம்: கைதடி முத்துக் குமாரசாமி ம.வி., 3ஆம் இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல் லூரி.

(எ-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கார் விற்பனைக்கு

FORD PREFECT EN - Sight வால்வ் மொடல் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ.தங்கராசா,36/4, கச்சேரி நல்லூர் வீதி (கச்சேரிக்கு அருகில்), கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (7895)

## காணி விற்பனைக்கு

தொல்புரம் மத்தியில், அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அண்மையில் காணி விற்பனைக்கு உண்டு. காலை 10.00 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளலாம். 01-501699 கொழும்பு. (7751)

## விற்பனைக்கு

யிப்சன், பான்ரையில் இங்கிலிஸ் நங்ஸ், அவுஸ், றிவேஸ்கறணம், சைனா, யொக்கோட்பியன் கோமர் போன்ற நல்லினப் புறாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலன் (வெள்ளை), டாக்டர் சுப்பிரமணியம் வீதி, மத்திய சந்தை முன்பாக, சுன்னாகம். (7956)

Sony 21" கலர் தொலைக் காட்சிகள் விற்பனைக்கு உண்டு. மொடல் KV 2183, 2135, 21G 2093 தொடர்பு: R.S.மகேஸ்வரன், K.K.S. வீதி, மல்லாகம் (அப்பாத்துரை கடைக் கருகில்). (7913)

பல நிறங்களில் லவ்பேட்ஸ், ஜவாபரட், விஞ்சோஸ், ஆபிரிக்க லவ்பேட்ஸ் குருவிகள், புதிய இன வர்ண மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள கஞம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (7993)

CD 125 HONDA மோட்டார் சைக்கிளும், 5l2 பரப்பு வீட்டுடன் கூடிய காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.அருணாசலம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி (பழைய Chruch இற்கு அருகில்). (7995)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில், விலையில் தினமும் காலை 6மணிதொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(7965)

## கோழித்தீன் விற்பனைக்கு

Original Prima கோழித்தீன், மாட்டுத்தீன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொகையாக கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7963)

## புறொயிலர் குஞ்சு விநியோகம்

BAHIRAHA No. 1 புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை 4மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவு செய்தவர்களும், தேவையானோரும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 40,கோயில வீதி, யாழ்ப்பாணம். (7991)

## இறைச்சிக்கோழி தேவை

07-09-2002 சனிக்கிழமை தொடக்கம் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்வோம். உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7966)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வீடு, நிலங்கள், பணம் 50 லட்சத்துக்கு மேல் உரித்துடைய அழகான பெண்ணுக்கு தகுதி வாய்ந்த மணமகன் தேவை. மணமகன் 35-42 வயதுக்கு இடைப்பட்டவராக இருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு விளம்பர இல.1626, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (7871)

## தவறிவிட்டது

மல்லாகம், ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த S.இந்திரராஜா ஆகிய எனது இலங்கை மின்சாரசபை அறிமுக அட்டையும், மோட்டார் காப்புறுதிப் பத்திரமும் நல்லூர் தேர்த்திருவிழாவின் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் மத்திய மின்நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். (8000)

குறாவத்தை வடக்கு, சுன்னாகம் என்ற முகவரியிடப்பட்ட வதன் சதீஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, Bank புத்தகம் (இல.22339 சுன்னாகம் மக்கள் வங்கி) என்பன நல்லூர் ஆலயச் சூழலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7992)

## அறை வாடகைக்கு

உத்தியோகத்தர் ஒருவருக்கு சுன்னாகம், மருதனார்மடம் பகுதிகளில் அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு விளம்பர இல.1630, C/o உதயன், யாழ்ப்பாணம். (7997)

## வீடு வாடகைக்கு

4அறைகள், KITCHEN, HALL, TOILET உடன் கூடிய பெரிய வீடு யாழ்நகரில் வாடகைக்கு உண்டு. தொடர்பு: கோவிந்தராஜ், 50, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ரியூசன் முன்பாக). (8001)

## கோழி மருந்துகள்

Gampura, Raniket, CRD தரமான தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு வழங்கப்படும். போத்தல் கொண்டு வரவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (7961)

## மெற்றாஸ்மயிலின் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.7

கலைஞானகேசரி செல்லையா மெற்றாஸ்மயில் ஆற்றிய கலைச் சேவையை பாராட்டும் முகமாக நடத்தப்படும் கௌரவிப்புவிழா இன்று காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் விழாக் குழுத்தலைவர் பொன்.தர்மேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கல்வியாளர்கள், அரச திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் எழுத்தாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்புரை ஆற்றுவர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய பங்குத் தந்தை பி.எம்.இம்மானுவேல் அடிகள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

மேற்படி கௌரவிப்பு விழாவில் கலைஞர் செ.மெற்றாஸ்மயில் பொன்னாடை போர்த்து, தங்கக்கிரீடம் சூட்டிக கௌரவிக்கப்படுவர். அத்துடன் 'மரபுக் கலை கலைஞானி' என்ற பட்டமும் இவ்விழாவில் வைத்து அவருக்குச் சூட்டப்படும். தொடர்ந்து சிறப்புமலர் வெளியிட்டு வைக்கப்படும்.

விசேட நிகழ்வாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'சிந்துநடையில் விசேட கூத்து' என்னும் நிகழ்வு இடம்பெறும்.(எ-ரி)

## கொழும்பில் எழுத்தாளர் மாநாடு

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் கலைஞர்களுக்கான மாநாடு ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை கொள்ளுப்பிட்டி சசகாவ மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

'இன்றைய சமாதானத்தை கட்டி எழுப்புவதற்கு எழுத்தாளர்கள், கலைஞர்களின் பங்களிப்பு என்ன' என்பதை மையமாகக் கொண்டே இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லீம் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-4)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

H A P P Y



B I R T H D A Y

### செல்வி விஷானி

07-09-2002

வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த
திரு.திருமதி விக்னேஸ்வரன் - சிவந்தினி
தம்பதிகளின் செல்வப்புதல்வி
**விஷானி**

இன்று (07-09-2002) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தை அவரது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமா, சித்தா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார் அனைவரும் கேசாவில் முத்துவிநாயகர் அருளால் பல்கலையும் கற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டுகாலம் நீடூழிவாழ்க என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

\- அம்மம்மா.

*14, கேசாவில் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (7694)

---

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

இந்திய ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், காதல் தோல்வியா? கல்வியில் தடையா? திருமணப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? குழந்தைச் செல்வம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? தொழில் பிரச்சினையா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகார மூலம் தீர்வுகாணலாம். சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். வியாழன் விடுமுறை.

**மணிசாமி சாமி**
(8009) யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி.
இல.54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).

---

பூலசிட்டி, அச்செழு
வளர்மதி சனசமூக நிலைய ஆதரவில்
உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவ முகாமும் இலவச கண்ணாடி பரிசோதித்து வழங்கலும்

*காலம் :-* **நாளை (08.09.2002) ஞாயிற்றுக்கிழமை**
**காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை**

*இடம் :-* வளர்மதி சனசமூக நிலையம்
பூலசிட்டி, அச்செழு

*கண் பரிசோதனை:-* லயன் எஸ்.எம்.பேர்னாண்டோ MJF
வைத்திய நிபுணர்களும், மருத்துவ மாணவர்களும் இப் பரிசோதனையை நடத்துவார்கள்.

*அனைவரும் வருக! பயன்பெறுக!!*

லயன்.ச.ஏகாம்பரநாதன் J.P. தலைவர். (8003) லயன் அ.ஈஸ்வரநாதன் செயலாளர்.

---

## நீங்காத நினைவில் ஓராண்டு

மண்ணகம் 05 - 12 - 1965



விண்ணகம் 20 - 08 - 2001

### அமரர் குமாரு சன்னதிநாதன்

*விதியின் சதியாலே - வீதி*
*விபத்தினிலே வீழ்ந்தீரையா!*
*ஆண்டு ஒன்று சென்றாலும் - நின்துயர்*
*ஆறவில்லை அப்பன் ஐயா!!*

(8004)

*வளலாய்,*
*அச்சுவேலி.*

பிரிவுத்துயரில்:
மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

---

உ

## யாழ்.அத்தியடி
## ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் கோயில்
# மஹா கும்பாபிஷேக விழா

09-09-2002(திங்கட்கிழமை) காலை 6.30 மணி முதல் 7.29 மணிவரை .

கடந்த 04.09.2002 (புதன்கிழமை)முதல் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.



நாளை (08.09.2002)ஞாயிறு காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறும்.

09.09.2002 (திங்கள்) காலை 6.30 மணிதொடக்கம் 7.29 மணிவரையுள்ள சுபவேளையில் அத்தியடி பிள்ளையார் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

மஹாகும்பாபிஷேகப் பிரதிஷ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் அவர்கள்
சர்வசாதகர் சிவஸ்ரீ கைலை.வாமதேவக்குருக்கள் அவர்கள்.

நண்பகல் 12.30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டப பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று எம்பெருமான் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

இரவு 8.00 மணிக்கு தெய்வீகப் பேருரை செ.கந்தசத்தியதாசன் B.A.(Hons) Dip.in.Edu. அவர்கள் நிகழ்த்துவார்கள்.

அதனைத் தொடர்ந்து உதயன் இசைக்குழுவினரின் 'பக்தி கானங்கள்' இடம்பெறும். பாடகர்கள்: கே.ஆர்.உதயகுமார், ஈழத்து சீர்காழி கே.வி.சச்சி மற்றும் இவர்களுடன் முன்னணி இசைக் கலைஞர்களும் இணைந்துகொள்வர்.

**10.09.2002** (செவ்வாய்) மாலை 5.00 மணிக்கு விநாயக சதுர்த்தி பூசை நடைபெறும்.

அன்றையதினம் நடைபெறவுள்ள சக்தி கணபதி பூசையில் கலந்துகொள்ளவிரும்பும் அடியார்களை முன்கூட்டியே அலுவலகத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளையார் பணியில்
கும்பாபிஷேக செயற்குழு. (8005)

து.கனகசபை
தலைவர்

## பதவி வெற்றிடங்கள் (Vacancies)

- முகாமையாளர் (Manager)
  *தகைமைகள்:* ஆளுமைத்திறன் உடையவராகவும் கடின உழைப்பாளி யாகவும் குறைந்தது க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தி யடைந்தவராகவும் இருப்பதுடன், முன்அனுபவம், ஆங்கில அறிவு என்பன மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்கள் /பயிலுநர்கள் (Electrical and Electronic Technicians/Trainees)
  *தகைமைகள்:* க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியும் குறைந்தது ஒரு வருட முன்அனுபவத்துடன், ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் (Security Guards)
  *தகைமைகள்:* குறைந்தது க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியுடன் மும்மொழித்தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும். விண்ணப்பதாரி பணிமுறை மாற்று (shifts) அடிப்படையில் பணியாற்ற வேண்டப்படுவீர்கள்.
- கணக்கியல்/பல்துறை லிகிதர்கள் (Accounts/Multi Duty Clerks)
  *தகைமைகள்:* க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியும் கணக்கியல் அறிவுடன், ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்பதாரிகள் சுயவிவரக்கோவையுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், இரண்டு உறுதிப்படுத்துபவர்களின் விவரம் என்பன வற்றுடன் 7 நாள்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தும்பி தொலைத் தொடர்பகம்**

90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். T.P. 2040, 2504. (8022)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 07 - 1921 | 08 - 08 - 2002 |

### திருமதி சின்னத்துரை தையல்முத்து

திதி: 07.09.2002

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது இல்லத்தில் நிகழும் ஆத்மாஞ்சலியிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (8018)

இவ்வண்ணம்,
மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

### அமரர் மு.கார்த்திகேயன் அவர்களின்

25ஆவது வருட

## நினைவுதினக் கூட்டம்

இடம் : சிற்றிஹோல், யாழ்ப்பாணம்.
நாள் : நாளை (08.09.2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி
தலைவர் : திரு.கா.நடராசா
*(தலைவர், வடஇலங்கை ஆசிரியர் சங்கம்)*

உரையாற்றுவோர்:

1. திரு.க.தணிகாசலம் *(ஆசிரியர், தாயகம்)*
2. திரு.க.சிவராமலிங்கம் *(இளைப்பாறிய ஆசிரியர்)*
3. திரு.வி.சின்னத்தம்பி *(இளைப்பாறிய ஆசிரியர்)*
4. திரு.கணேசவேல் *(கிராம சேவையாளர்)*
5. திரு.க.நடேசு "தெணியான்" *(இலக்கிய கர்த்தா)*
6. திரு.க.சண்முகம் *(தபாலதிபர்)*
7. திரு.S.குணேந்திரராசா *(F.O.R.U.T.)*
8. திரு.சொ.சிவபாலன் *(இ.வ.ஊ.ச.)*

நன்றியுரை : திரு.ச.தியாகலிங்கம் *(இலங்கை ஆசிரியர் சங்கம்)*

(8031) ~ நினைவு தின அமைப்புக் குழு.

## தசாக அழைப்பு

அன்புடையீர்,

கடந்த ஆவணித் திங்கள் 14ஆம் நாள் (30.08.2002)
வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்ப ஒளி விளக்கு
சிவாகமசுரபி

### சிவஸ்ரீ கதிர். செல்லப்பாக்குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள்

*தசாகம்:* 08.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி
*ஏகோதிஷ்டம்:* மாசியம் 09.09.2002 திங்கட்கிழமை முற்பகல் 11மணி
*சபிண்டீகரணம்:* 11.09.2002 புதன்கிழமை காலை 10மணி
*கிரகயக்ஞம் (மதியபோசனம்):* 12.09.2002 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மாதகல் கிழக்கு,*
*மாதகல்.* (8035)

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### சமாதானம் வேண்டி கொழும்பில் இன்று மஹாயாகம்

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக் கும் இடையிலான புரிந்துணர்வு ஒப் பந்தம் வெற்றிபெறவும் -

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட இறைஆசி வேண்டியும் இன்று மாலை 6 மணிமுதல் 8 மணிவரை கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ தம்பையா சத்திரத் தில் உள்ள சித்திவிநாயகர் ஆலயத் தில் விசேட திவ்யஹோம மஹாயாகம் நடைபெறவுள்ளது. சர்வமதத் தலை வர்கள் இந்த மஹாயாகத்தில் பங்கு கொள்வர். குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்ப தாச சாம்பசிவ சிவாச்சாரியார் தலை மையில் இந்த யாகம் நடைபெறும்.


**ENGLISH ACADEMY**

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**Basic Grammar**

7 Hours

***By:K.T.Rajah***

பிரிவு I ஆரம்பம்:
08.09.2002 8 a.m.

☆ முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்வது சிறந்தது. (8029)

**விற்பனைக்கு**

சகல ஆவணங்களுடன்
ISUZU ELF 150 (26 SRI)
உடன் விற்பனைக்கு உண்டு.
நேரில் விலை பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு: 41, நாயன்மார் வீதி,
(8030) நல்லூர். T.P.: 077-344530.

தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான

**புலமைப்பரிசில் ~ 2003**

*பரீட்சை 1இல் அதிகூடிய புள்ளி பெற்ற, பரிசு பெறும் மாணவர்கள்*

- வி.சிவதர்சிகா - 159
- ச.பக்தஜனனி - 158
- செ.அலெக்ஸ்சேவியர் - 144

அடுத்த பரீட்சை - ஞாயிறு (நாளை) காலை 8.30/12.30

☆ வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.

தரம் 1 முதல் O/L வரையான 3ஆம் தவணைக்கான வகுப்புகள் நாளைமுதல் ஆரம்பம்

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8037)

**விற்பனைக்கு**

TOYATA LITE ACE (CR 41)
GS 2 xxx இலக்க புதிய ரக வான்
விற்பனைக்கு உண்டு
*தொடர்பு:-* No.1, பிறவுண் வீதி,
(8021) யாழ்ப்பாணம்.


## தவறிவிட்டன

கல்லூரி வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த *நடராசா விக்னராஜா* என்பவருடைய தே.அ.அ., வாகன சாரதி அனுமதிப்பத்திரம், வவுனியா நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரம், தொலைபேசி இலக்கப் புத்தகம் ஆகியன நல்லூர்க் கந்தன் ஆலய உள்வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து *செ.அம்பிகாபதி, "பண" தொலைத் தொடர்பகம், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு (T.P. 070- 212712, 070-212704)* எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (7998)


**நாகம்ஸ்** சுன்னாகம்

சூர்யா, லைலா, ஸ்நேகா நடிக்க

**உன்னை நினைத்து** (சீஸ்கள்)

சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பு.நே.) (8015)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், சங்கவி, நாசர் நடிக்க

**அமராவதி** (ரீஸ்)

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-23604)

**ராஜா** யாழ்ப்பாணம்.

3ஆவது ஜனத்திரள் வாரம்
ரஜனிகாந் மனீஷா கவுண்டமணி நடித்த

**பாபா**

ரிக்கட் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
பல்கனி 60/-, பின்வரிசை 50/-
காட்சிகள்: 10.30, 2.30, 6.00 (C-23396)

**சுன்னாகம் றோட்டரக்ட் கழகமும் சக்தி T.V.யும்**

இணைந்து நடத்தும்

**பட்டிமன்றச் சுற்றுப்போட்டி**

யாழ். மாவட்ட இன்ரறக்ட் கழக மாணவர்களிடையே நடைபெறவிருந்த பட்டிமன்றச் சுற்றுப்போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று நடை பெறமாட்டாது என்பதையும், இந்நிகழ்ச்சி நாளை (08.09.2002) ஞாயிற்றுக் கிழமை *யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில்* காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்வுகள் யாவும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு சக்தி T.V.யில் களம் நிகழ்ச்சி ஊடாக ஒளிபரப்புச் செய்யப்படும்.

இதில் பங்குபற்ற ஆர்வம் உள்ள மாணவர்கள் அனைவரும் மேற்குறிப் பிட்ட நேரத்திற்கு முன்பாகச் சமுகந்தரவும்.

*குறிப்பு:* இந்நிகழ்வில் அனைத்து றோட்டறிக், றோட்டரக்ட், இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களையும் மற்றும் ஆர்வம் உள்ளோரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தலைவர்,*
(C/23718) சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்.


## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் நேமிநாதன்

**கேணல் ராஜு /குயிலன்**

(தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரும் இலத்திரனியல் பொறியியலாளரும், யாழ். இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும்)

ஏழாலையைச் சேர்ந்த அம்பலவாணர் நேமிநாதன் 25.08.2002 ஞாயிறன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர்களான கதிரிப்பிள்ளை அம்பலவாணர் - சின்னம்மா அம்பலவாணர் தம்பதிகளின் புதல்வரும் கோமளவல்லி, பரமநாதன், சத்தியநாதன், சுதர்சனா, உமாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*211/13, கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (8006)

தகவல்:
உறவினர்கள்.

### ஆறுமுகம் கணேசன் (சண்முகம்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் கணேசன் (சண்முகம்) அவர்கள் 05.09.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் மகேஸ்வரி பத்மநாதன் (மல்லாவி), சொக்கலிங்கம் (சுருவில), நித்தியலட்சுமி (மல்லாவி), தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியநாதன் (வேலணை ப.நோ.கூ.சங்கம்), ஜெயகௌரி (வேலணை ப.நோ.கூ.சங்கம்), தவலட்சுமி, நிர்மலாதேவி, விஜயகுமார், மயூரநாதன், தேவகுமார், ஆறுமுகநாதன், ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீஸ்கந்த நாராயணன், சிறீதரராசன், சாரதா ஆகியோரின் மாமனாரும் கஜவதனன், கபிலன், ராகவி, சுபானுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2002) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்களாவடி,*
*வேலணை.* (8012)

தகவல்:
க.பாக்கியநாதன்
(மகன்)

### திருமதி முத்தையா கமலாம்பாள்

அரியாலையைச் சேர்ந்த திருமதி முத்தையா கமலாம்பாள் அவர்கள் நேற்று (06.09.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முத்தையாவின் அன்பு மனைவியும் திருமதி பரமசாமி பூரணத்தின் சகோதரியும் குணரத்தினம் (இ.போ.ச.), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவிகா, கமலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2002) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*125/4, A.V. Road,*
*அரியாலை.* (8039)

தகவல்:
மு.குணரத்தினம் (மகன்)

### தம்பிராஜா ஞானானந்தன் (ஞானம்)

வேலணை மேற்கு, தலைகாட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் ஞானானந்தன் 04.09.2002 புதன்கிழமை கனடாவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பாக்கியலெட்சுமியின் (கனடா) அன்புக் கணவரும் இலந்தைவனம், சலையாவத்தை, வேலணை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லப்பா - முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் ஞானகரன் (கனடா), பாஸ்கரன் (ஜேர்மனி), ஞானசம்பந்தன் (பிரான்ஸ்), ஞானசெல்வன் (பிரான்ஸ்), ஞானநந்தினி (கனடா), ஞானவாசகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம் (கொழும்பு), காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சண்முகநாதன் (கொழும்பு நாதன் & Co.), மகாலிங்கம், காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் தவமணி (வைமன் வீதி, நல்லூர்), பரமசிவம் (நோர்வே) ஆகியோரின் மூத்த சகோதரரும் கனகரட்ணம் (கனடா), சோமசுந்தரம் (பிரான்ஸ்), இலகம்மா (வவுனியா), அன்னலட்சுமி (கனடா), சண்முகநாதன் (கொழும்பு), காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2002) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கா.த.மகாலிங்கம் (சகோதரன்)
*37, வைமன் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

ஞா.ஞானகரன் (மகன்)
1404 - 4091 SHEPPARD AVE E
SCARBOROUGH ON
MIS 3H2, CANADA.
T.P.: 416 - 4124342. (8034)

## Two Great Companies in Partnership

Dream Solutions (PVT) Ltd.

D-SOLVE Colombo. | I.B.M.S Jaffna.

நிலவு.Com

*It Solutions People in Jaffna.*

உங்கள் தகவல் தொழில்நுட்பக் கனவுகளை நனவாக்குங்கள்.

**22 1/1, Galle Road, Dehiwala.**

**T.P.:01 - 728491, 077 - 740413** (C-23706)

## R.R.I

### RAPID RESULTS INSTITUTE

*FOR*

### VOCATIONAL STUDIES, CHUNNAKAM.

யாழ்.மண்ணில் தொழில்சார் கற்கை நெறிகளில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிநெறிகளை எமது நிறுவனம் ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இத்துறையில் பல்லாண்டுகால அனுபவமுள்ளவர்களாகிய நாங்கள் சிறப்புத்தகைமை வாய்ந்த ஆசிரியர்கள்மூலம் செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய கற்கைநெறிகளை இளைஞர் - யுவதிகளாகிய உங்களுக்கு வழங்குகின்றோம்.

### கற்கைநெறிகள்

1. கணனிப் பயிற்சி MS OFFICE
2. தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் (தமிழ், ஆங்கிலம்) (இக்காலப்பகுதியில் நிழற்பிரதி, றோணியோ, தட்டச்சு இயந்திரங்களில் ஏற்படும் சிறிய பழுதுகளைச் சீர்செய்வது தொடர்பான செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படும்.)
3. ஏனைய தொழிற்கற்கைகள் பற்றிய விவரம் விரைவில் அறிவிக்கப்படும். இப்பயிற்சி நெறிகள் யாவும் 09.09.2002 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

இக்கற்கைநெறியில் இணையவிரும்பும் மாணவர்கள்
கந்தையா வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்
என்ற முகவரியில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு
நேரில் சமுகந்தரவும்.

*(நேரகுசி மாணவர்களோடு கலந்துரையாடிய பின் அவர்களின் வசதிகளுக்கமையத் தீர்மானிக்கப்படும்.)* (8010)

## Walk in Interview

**Lady Practical Instructor**
**(Ms Office)**

முன்னனுபவம், ஆங்கில அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை

STP Computer World (Pvt.) Limited.

54A. Palaly Road.
Kantharmadam.
Jaffna. T.P. 2674

## மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள தோமஸ் லேனில் (Thomas Lane) மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
(7999) **T.P. 3393 (சிறி)**

## மரண அறிவித்தல்

### பசுபதி குழந்தைவேலு

அறுகுவெளி, தலங்களப்பைச் சேர்ந்த பசுபதி குழந்தைவேலு அவர்கள் நேற்று (06.09.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2002) சனிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ஆறுமுகராசா,
(மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்)
(மருமகன்)

தற்காலிக முகவரி:
*கச்சாய் வீதி,*
*உதயசூரியன் ஒழுங்கை,*
*சாவகச்சேரி.* (C-23725)

## தங்குமிட வசதி தேவை

யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவிருக்கும் அரச சார் பற்ற நிறுவனத்தின் குழுவினருக்கு வசதியான தங்குமிடம் தேவை.

தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்
இலக்கம்: 3837 (C-23724)

## யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் அதிதிப் பேச்சாளர் தினம் 08.09.2002

*இடம்:* 'உதயன்' கேட்போர்கூடம் யாழ்ப்பாணம்.
*காலம்:* 08.09.2002 ஞாயிறு மாலை 5.00மணி
*அதிதிப்பேச்சாளர்கள்:* திரு.திருமதி.எஸ்.நிஷாந்தன் (மனித உரிமை ஆர்வலர்கள்)
*விடயம்:* 'மனித உரிமைகள்' விசேடமாக பெண்கள் உரிமைகள் பற்றியது.

அனைத்து றோட்டரக்ற், இன்ரறக்ட் கழகத்தினரையும் பாடசாலை இன்ரறக்ட் கழக ஆசிரிய ஆலோசகர்களையும், அதிபர்கள், ஆர்வலர்களையும் தவறாது பங்குபற்றி பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C-23723) யாழ்.றோட்டறிக் கழகத்தினர்.

## சுற்றுலா

10.09.2002 செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளவுள்ள சுற்றுலா சம்பந்தமான விடயங்களைத் தீர்மானிப்பதற்காக (2000/2001) 2அம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள் அனைவரையும் 08.09.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு எமது மாணவர் பொது அறையில் தவறாது கூடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாணவர் பிரதிநிதி,
2ஆம் வருடம் விஞ்ஞான பீடம்,
(8033) யாழ். பல்கலைக்கழகம் (2000/2001)

## இதோ பிரிவு II ஆரம்பம்!

யாழ்.மாணவர்களுக்கான
**வங்கியியல் கற்கைநெறி**
**B.Sc. (Hons) Degree & ACIB**
**DBF, ACBF, CBF**
வகுப்புகள் ஆரம்பம்.
விண்ணப்ப முடிவு திகதி:
10.09.2002

**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Rd,
(சி-23673) Jaffna.

## இல்லத்தரசிகளே! இதோ நீங்கள் எதிர்பார்த்த நற்செய்தி!

### லாவ்ஸ் லங்கா சமையல் எரிவாயு




சமையலில் உங்கள் விறகுச் செலவைக் குறைப்பதோடு, புகையற்ற - கரியற்ற சுகமான சமையல் அனுபவத்தையும் வழங்குகின்றது!

*லாவ்ஸ் லங்கா சமையல் எரிவாயுவை யாழ்நகரில் உங்களுக்கு வழங்குபவர்கள்:*

- **ஈஸ்வரபகவான் & கொம்பனி**
  100, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- **ஈஸ்வராம்பாள் & கோ.**
  155, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- **சிவன் ஸ்ரோர்ஸ்**
  பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
- **நடராஜா & கோ.**
  பலாலி வீதி, திருநெல்வேலி.
- **விக்னேஸ்வரா களஞ்சியம்**
  பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
- **சுபாஸ் சென்ரர்**
  கொக்குவில் சந்தி, கொக்குவில்.
- **சுந்தர்சன்**
  மார்க்கட் வியூ, மானிப்பாய்.
- **டாபி மல்ரி சேவிஸ் கொம்பனி**
  காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
- **பாக்கியரட்ணம் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்**
  163, 165, பிரதான வீதி, சங்கானை.
- **மருதம் ஹாட்வெயர்ஸ்**
  M.M.V. வீதி, நெல்லியடி.
- **ஜெகா மோட்டோர்ஸ்**
  பிரதான வீதி, நெல்லியடி.
- **ராஜன் சைக்கிள் வேக்ஸ்**
  பஸ் நிலையம், பருத்தித்துறை.

(8036)

## யாழ். மாவட்ட வாயு ஒட்டுநர்களுக்கு ஒரு நற்செய்தி

Ceylon Oxygen **GAS WELDERS**

வாயு ஒட்டு வேலைகளுக்குப் பயன்படும் ஒட்சிசன், அசற்றலின் போன்ற வாயுக்களையும் அதற்கான உபகரணங்களையும் யாழ். மாவட்டத்தில் விநியோகிப்பதற்கான ஏக முகவர்களாக AMT TRANSPORT SERVICE ஆகிய எங்களை இலங்கை ஒட்சிசன் லிமிட்டெட் நியமித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**AMT TRANSPORT SERVICE**
பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி,
(7916) கோப்பாய், யாழ்ப்பாணம். T.P. - 077-686220.

## மரண அறிவித்தல்

### திருமதி பாமதேவி பிரதாபன்

ஆவரங்கால் கிழக்கு, புத்தூரை வதிவிடமாகக் கொண்ட திருமதி பாமதேவி அவர்கள் 04.09.2002 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பிரதாபன் அவர்களின் அன்பு மனைவியும், சந்தோசன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), யஸ்மின், சாலமன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ப.கந்தசாமி (J.P., பிரதேச சபை உறுப்பினர்) மற்றும் கமலாதேவி தம்பதியினரின் அன்பு மகளும், புஸ்பாதேவி (சுவிஸ்), சத்தியாதேவி, ராதிகாதேவி, பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், த.கந்தாரணியம் - திரோமாவதி (வதிரி) ஆகியோரின் மருமகளும் மகேந்திரன்(சுவிஸ்), சிறிபரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2002)சனிக்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆவரங்கால் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால் கிழக்கு,* தகவல்:
*புத்தூர்.* (C/23721) க.பிரதாபன் (கணவர்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.